கவிச்சரம்

வெளியீடு

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

மார்கழி

2023

இதழ் - 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிச்சரம்

வெளியீடு:

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

கார்த்திகை 05, 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

1.	இதழாசிரியரிடமிருந்து	3
2.	வாழ்த்துரை (கவிநாயகர் கந்தவனம்)	6
3.	கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத் தலைவரின் செய்தி	8
4.	வாழ்த்துரை (முனைவர் பாலசுந்தரம் இளையதம்பி)	10
5.	வாழ்த்துரை (மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா)	12
6.	வாழ்த்துரை (கவிஞர் காசி ஆனந்தன்)	15
7.	வாழ்த்துரை (பாவலர் அகணி சுரேஸ்)	17
8.	அணிந்துரை	19
9.	மதிப்புரை	27
10.	கழகச் செயலாளரிடமிருந்து	35
11.	நன்றி நவிலல்	42
12.	உறுப்புத் தானம்	44
13.	தமிழரது சில தடங்கள்	46
14.	அயலெல்லாம் மறையென ஆகிடுமே!	48
15.	மனிதர்கள் மண்தன்னில் மாறுவாரா?	50
16.	ஆசு + ஈவு + அகம்	52
17.	கனடிய மண்கண்ட கருணையிலாக் கொலைகள்	54
18.	காதல் செய்வீர்	56
19.	கூடு கட்டும் நினைவுகள்!	58
20.	இளவேனில்	60
21.	புதியதோர் உலகம் செய்வோம்	61
22.	புத்தாண்டு பிறக்கட்டும் புத்துணர்வு மலரட்டும்	63
23.	நல்லாசான் மீது கொண்ட நன்மதிப்பு	64
24.	வாழவைத்த நாட்டை வாயாரப் பாடிடுவோடும்	66
25.	மூத்தோர் நாட்டின் முதுகெலும்பு	68
26.	அன்பைத் தேடும் இதயங்கள்	70
27.	உதிர்கின்ற இலைகண்டு உழல்வதில்லை விருட்சங்கள்!	72
28.	கறுப்பு ஜுலை	74
29.	எங்கள் குலதெய்வம்	75
30.	மாயத்தை என்சொல்வேன் கேள்	76
31.	வாய்மை	77
32.	வெண்பாவிலோர் வீரக் காதல்	79
33.	இலக்கியத் திறனாய்வு	81
34.	போரில் தோற்றுப்போன குதிரை வீரன்	85
35.	கண்ணீர் அஞ்சலி பெரும்புலவர் மர்ஹூம் முஹம்மத் ஹனீபா	98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழாசிரியரிடமிருந்து ....

வணக்கம் வாசகர்களே, நலம் தானே!, அனைவரையும் அழைக்கின்றேன், வாருங்கள் எங்கள் கவிச்சரத்தைப் படித்து மகிழ்வதற்காக. காலம் சற்று நீண்டு விட்டது. காரணம் அனைவரும் அறிந்த இயற்கை தந்த பேரிடர். இந்த உலகப் பெருந்தொற்று, எண்ணற்ற மனித உயிர்களை இரக்கமின்றிப் பலியெடுத்த கொடுமையால், உலகமே முடங்கியது. சகல நடவடிக்கைகளும் தடைப்பட்டுப் புதிய உலக ஒழுங்கு ஏற்பட்டது. அதன் தாக்கம் எம்மையும் விட்டு வைக்கவில்லை! கவிச்சரத்தின் வருகையையும் அது தள்ளி வைத்தது.

ஈழத் தமிழர்களாகிய நாம் ஏற்றமிகு வாழ்வைத் துறந்து, ஏதிலிகளாக உலகின் பல நாடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள். பல்லின மக்கள் வாழும் நாடுகளில் நம் மொழியும், செழுமைமிகு எமது இலக்கிய வளமும், பண்பாடும் கரைந்து விடாமல் கட்டிக் காத்தவர்கள் நம் முதல் தலைமுறையினர். நமது மொழிதான் நமது அடையாளம். அது கனடிய மண்ணில் நிலைபெற வேண்டுமெனும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதே "கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்". அதற்கான வித்தை ஊன்றி விருட்சமாக வளர்த்த பெருமைக்குரிய அறிஞர்கள் நினைவில் வாழும் பண்டிதர் மா.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களும், கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களும் ஆவார்கள்.

உங்கள் கைகளை அலங்கரிக்கும் இக் "கவிச்சரம்" எமது கழகத்தின் நான்காவது வெளியீடாகும். அனைத்து கவிஞர்களின் படைப்புகள் அகர வரிசையில் பல வண்ண மலர்களைக் கோத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையாக இந்த இதழ் அமைந்துள்ளது. கவிதைகள் மட்டுமின்றி வாழ்த்துரை, அணிந்துரை, மதிப்புரை, கட்டுரை, சிறுகதை எனப் பல விடயங்களை உள்ளடக்கி இது மணம் வீசுகின்றது.

எமது முதலாவது கவிச்சரம் தை மாதம் 2016 ஆம் ஆண்டு வெளியானது. இரண்டாவது கவிச்சரம் தை மாதம் 2019ஆம் ஆண்டும், மூன்றாவது கவிச்சரம் மார்கழி மாதம் 2020 ஆம் ஆண்டும் வெளிவந்தன. எமது நான்காவது கவிச்சரம் தற்போது உங்கள் கைகளை அலங்கரிக்கின்றது.

"செந்தமிழ்ச் சிற்பி" பண்டிதர் மா.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களின் நினைவேந்தற் சிறப்பு மலர் ஏப்ரல் மாதம் 2018ஆம் ஆண்டு எமது கழகத்தினால் வெளியிடப்பட்டது.

எமது கவிஞர் கழகத்தின் மூச்சாக விளங்குவது நாம் நடத்தும் இலவச மரபுக் கவிதை வகுப்பாகும். இதில் யாப்பிலக்கணம், தமிழ் இலக்கியம், மரபுக் கவிதை எழுதுவதற்கான பயிற்சி என்பன கற்பிக்கப்பட்டன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வகுப்பறையில் நடைபெற்ற கற்பித்தல் நிகழ்வு பெருந்தொற்றைத் தொடர்ந்து தற்போது மெய்நிகர் மூலம் நடைபெறுகின்றது. இதனை யாப்பிலக்கண ஆசான் பாவலர் மாவிலி மைந்தன் சி.சண்முகராஜா அவர்கள் கற்பித்து வருகின்றார். அத்தோடு பாவலர் அகணி சுரேஸ் அவர்களால் கணினியும் கற்பிக்கப்படுகின்றது. மேலும், இலக்கிய உரைகள், சிறப்புக் கவியரங்கங்களும் நடைபெறுகின்றன. இந்நிகழ்வுகளில் கனடாவில் மட்டுமின்றி உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் தமிழ் ஆர்வலர்கள் கலந்து பயனடைகின்றனர்.

நிறைவுக்கு முன்பாக, கவிச்சரத்திற்கு கவிதைகள் வழங்கிய எமது கவிஞர்கள் அனைவருக்கும், வாழ்த்துரை, அணிந்துரை, மதிப்புரை, கட்டுரை மற்றும் சிறுகதை எனப் பல்வேறு ஆக்கங்களை வழங்கிய தமிழ் அறிஞர்களுக்கும் மற்றும் தோன்றாத்துணையாகக் கேட்கும் போதெல்லாம் மறுக்காது ஆலோசனை வழங்கிய மதிப்புக்குரிய திருக்குறள் தேனீ பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெ. அரங்கராசன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் தேவையான புகைப்படங்களை எடுத்துத் தந்த கே.கமலலிங்கம் அவர்களுக்கும், இம்மலரில் இடம்பெறும் ஆக்கங்களின் தட்டச்சுப் பிரதிகளை ஒப்புநோக்கி திருத்தங்களை மேற்கொள்ள உதவிய பாவலர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா, பாவலர் பவானி தர்மகுலசிங்கம், மருத்துவர் துளசி விக்னேஸ்வரன் (தமிழ் முதுகலை இரண்டாம் ஆண்டு) ஆகியோருக்கும், இம்மலரை அழகுறத் தட்டச்சு செய்து, வடிவமைத்துத் தந்த பா. சிவசங்கரன் அவர்களுக்கும், குறுகிய காலத்தில் அழகிய புத்தகமாக்கி தந்த மல்ட்டி ஸ்மாா்ட் சொல்யூஷன் அச்சகத்தாருக்கும் கழகத்தின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதுவரை காத்திருந்தது போதும்...... வாருங்கள் மலருக்குள் செல்வோம். நன்றி.

அன்புடன்,
பாவலர், க. குமரகுரு
இதழாசிரியர்.
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்.
டொரண்டோ, கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

அகிலத்தில் மரபுக் கவிதை ஓங்கிப் பகலவன் போல ஒளி வீச வேண்டும் என்ற உன்னதமான நோக்கில் 2011 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி உருவாக்கப் பெற்றதுதான் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம். என் நினைவில் எப்போதும் வாழும் நண்பர் பண்டிதர் மா.செ. அலெக்சாந்தரிடமும், என்னிடமும் யாப்பிலக்கணம், அணி இலக்கணம், தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், ஐம்பெரும் காப்பியம், திருமுறைகள் ஆகியவற்றை முறைப்படி கற்று, மரபுக்கவிதை எழுதுவதற்குப் பயிற்சி பெற்ற கவிஞர்கள், எங்கள் கவிஞர் கழகத்தின் ஆரம்ப அங்கத்தவர்களாக இடம் பெற்றனர்.

எமது கழகத்தின் கன்னி முயற்சியாகப் "பொதிகைப் புது மலர்" என்னும் மரபுக் கவிதை தொகுப்பு நூல் 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி வெளியிட்டோம். இக் கவிதை மலரைத் தொடர்ந்து "கவிச்சரம்" என்ற முதலாவது மரபுக் கவிதை மலரை 2016 ஆம் ஆண்டு வெளியிட்டோம். இரண்டாவது மலரை 2019 ஆம் ஆண்டிலும், மூன்றாவது மலரை 2020 ஆம் ஆண்டிலும், வெளியீடு செய்தோம். இம்மலர்கள், தமிழர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பையும் பாராட்டையும் பெற்றன. இன்று உங்கள் கைகளிலே தவழ்ந்து கொண்டிருப்பது நான்காவது "கவிச்சரமாகும்".

இக்கவிச்சரத்தில் கவிதைகள், பல பா வடிவங்களில் அமைந்திருக்கின்றன. கவிஞர்கள் இலகு தமிழில் சுவைக்கும் சொற்களால் தித்திக்கும் வண்ணம் கவிதைகளைப் படைத்திருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய உள்ளத்தில் உள்ள கருத்தினை மிகவும் சிறப்பாகப் பதிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருக்கின்றார்கள். அவர்களின் கவிநயத்தை உளமாரப் பாராட்டுகின்றேன். அவர்கள் நீடூழி வாழ்ந்து, தமிழை உலகெலாம் பரப்பித் தமிழ் மரபைக் காப்பாற்றுவார்கள் என்று முழுமையாக நம்புகின்றேன். விநாயகரை வணங்கி, கவிஞர்களை நெஞ்சார வாழ்த்துகின்றேன். கவிதைப் பிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள் தமிழ் மரபை வளர்த்திட உதவி செய்வீர்கள் என்று நம்பி, கவிச்சரம் மணம் வீசி, மண்ணில் நீடித்து நிலைத்திருக்க வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகளுடன்,

இலக்கிய வித்தகர், கவிநாயகர் வி. கந்தவனம்

காப்பாளர்

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்.

டொரண்டோ, கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத் தலைவரின் செய்தி



மூத்த மொழியாம் தமிழ்மொழியின் இலக்கணத்தை முறையே இலக்கிய வித்தகர் முதன்மைப் பாவலர் விநாயகர் கந்தவனம் ஐயாவிடமும் செந்தமிழ்ச் சிற்பி, பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் ஐயாவிடமும் கற்று மரபுக் கவிதைகளை எழுதிக் கொண்டு இருப்பவர்கள் எங்கள் கனடாத் தமிழ்க் கவிஞர் கழக அங்கத்தவர்களாகும்.

எங்கள் கழகத்தால் வெளியீடு செய்யப் பெற்ற "கவிச்சரம்-3" கோவிட்-19 காரணமாகச் சிறிது காலம் தாமதமாகி, 2020ஆம் ஆண்டு வெளிவந்தது.

எமது சஞ்சிகைக்குப் பேராதரவு தந்தமைக்கு முதற்கண் வாசகப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மரபுக் கவிதை மண்ணில் மறைந்து போகக் கூடாது; உலகெலாம் மணம் வீசவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கம் பெற்ற கவிஞர் கழகம் இன்று உலகெலாம் தமிழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றது.

அதற்குத் துணையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஈழத்தாய் தொலைக்காட்சி நிறுவனம், தமிழாழி தொலைக்காட்சி நிறுவனம், எஸ்.ரி.எஸ் தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கும், தமிழர் குடிமைச் செயலகம் - திரு. நீதன் சண்முகராஜா அவர்களுக்கும் நமது சங்கத்தின் சார்பில் நன்றி பாராட்டுகின்றேன். எங்களை இந்த நிறுவனத்தில் கவிதை மழை பொழியச் செய்ய வைத்த கவிஞர் அகணி சுரேஸ், கவிஞர் அருட்கவி ஞானகணேசன் மற்றும் கவிஞர் மாவலி மைந்தன் சண்முகராசா ஆகியோருக்குக் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை கழகத்தின் சார்பில் மூவருக்கு "வித்தகர்" என்ற பட்டம் அளித்திருந்தோம். பாராட்டு விழாவும், இறுவட்டு வெளியீடும் செய்தோம். செயலாளர் அவர்கள் குறிப்பாக அவர்களின் பெயர்களை விபரமாகத் தருவார் என்று எண்ணுகின்றேன்.

இவ் வருடமும் எங்கள் கழகத்திற்கு மரபுக் கவிஞரை உருவாக்கிய எங்கள் கழகத்து ஆசான் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்களை நெஞ்சாரப் பாராட்டி, உளமார வாழ்த்தி நன்றி கூறி மகிழ்கிறேன்.

இவ்வாண்டில் வெளிவரும் நமது "கவிச்சரம்" சஞ்சிகைக்கு பேராதரவு தந்து, கவிஞர்களை ஊக்குவித்துத் தமிழை வளர்க்க உதவுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

அன்புடன்,
பாவலர், கந்த. ஸ்ரீபஞ்சநாதன்
தலைவர்.
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்
டொரண்டோ, கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

குமரித் தமிழகத்திலே தடம்பதித்த தமிழ் மரபுக் கவிதைகள் இன்றளவும் கனடாவிலும் நிலைபெற்று வளர்ச்சி பெறத் துணைபுரியும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தை அகம் கனிந்து வாழ்த்துகின்றேன். கால மாற்றம் கவிதைக்கும் உண்டு! அது காலத்தின் முறைமையாகும். ஆயினும் இக்கழகம் மரபுக் கவிதைக்கு உயிர்ப்பளிக்கும் வகையில், யாப்பு வகுப்பு என்னும் பாத்திகட்டி, யாப்பறி புலவர்களால் ஊட்டம் அளித்து வருதல் தமிழ்ப் பெரும் பணியாகும்.

செம்மொழித் தமிழின் சீரிளமையும், தமிழ் இலக்கியத்தின் உலகு தழுவிய பெருமையும் இலக்கிய உலகிலே தமிழினத்தை தலைநிமிரச் செய்துள்ளன. தொல்காப்பியர் தமிழ் இலக்கிய மரபுநெறியை வரையறைசெய்து வழிகாட்டியவர் என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். கவிதையின் செல்நெறி கைக்கூ கவிதை வரை வளர்ந்திருக்கும் இக்கால கட்டத்திலும் தமிழ் ஆர்வம்கொண்ட கவிதையாளர்களை மரபுக்கவிதை இயற்றும் வகையில் நெறிப்படுத்தி, ஊக்கப்படுத்தி வரும் கவிஞர் கழகம் பல்லாண்டுகள் நற்றமிழ்ப் பணி ஆற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

கனடாவில் மரபுக்கவிஞர்கள் எனப் போற்றப்படும் கவிஞர் வி. கந்தவனம், பண்டிதர் மா. செ. அலெக்சாந்தர் எனும் நன் மானுடங்களின் வழிகாட்டலில், 2011ஆம் ஆண்டில் உதயமான "கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்" தனது படைப்புக்களைக் "கவிச்சரம்" என்ற கவிதை இதழ் மூலம் வெளியிட்டுக், கவிதையாளர்களுக்கு ஊக்கம் அளித்து வருதல் பாராட்டத்தக்க நன்முயற்சியாகும். கோவிட்-19 பெருந்தொற்றுத் தடை இடைவெளியின் பின்னர், இக்கழகம் தனது கவிச்சரம் நான்காவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை இப்போது வெளியிடுவதையிட்டுப் பேருவகை அடைகிறேன்.

கனடாவில் மரபுக்கவிதை நாற்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினைக் கொண்டது. ஈழத்துப் பூராடனார் க. த. செல்வராஜகோபால் முதல், எம்முடன் வாழும் என் அருமை நண்பர் கவிஞர் மாவிலி மைந்தன்வரை பல்லோர் தமிழ்க் கவிதைக்கு உயிரூட்டி வந்துள்ளனர். இத்தகு கனடாத் தமிழ்க் கவிதையாளர்களின் பணிகள் வரலாற்று நோக்கில் தனி நூலாக எழுதப்பட வேண்டும். இதற்குரிய தரவுகள் 'கனடாவில் இலங்கைத் தமிழர் வாழ்வும் வரலாறும்' (2017) என்ற நூலிலும் பெற்றுக் கொள்ளலாம். வாழ்வு நிலையற்றது - விழாக்கள் - புகழுரைகள் மறந்து போகும் தன்மையன என்பதையும் கருத்திற் கொண்டு, இம்முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

பல்லினப் பண்பாட்டு நாட்டிலே தடம்பதித்துத் தமிழ் ஆர்வலர் அனைவருக்கும் இடமளித்து ஊக்கமளித்துத் தமிழ்க்கவிதை மரபைக் கற்பித்துவரும் தமிழ்ப்பணி, புலம்பெயர்நாட்டிலே தமிழின் இருப்புக்கு மேலும் உரம் ஊட்டுகின்றது. தமிழ் இலக்கியப் பரப்பில் ஈழத்துப் புலவர்களுக்கும் இடமுண்டு. அவ்வழியிற் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் அப்பணியைத் தனது இலக்காகக்கொண்டு, ஆற்றல் மிகு தமிழ்க் கவிஞர்களை உருவாக்கிக், கனடாத் தமிழ்க் கவிதைப் பூஞ்சோலையை எல்லோரும் நுகரும்வகை செய்தல் வேண்டும் என்பதே என் விருப்பும் வாழ்த்துமாகும்.

அன்பான வாழ்த்துகளுடன்,

முனைவர் பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி
தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலை வளாகம், கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 11 ஆண்டுகள் கடந்து விட்டன. கவிநாயகர் கந்தவனம் மற்றும் நினைவில் வாழும் அமரர் பண்டிதர் மா. செ. அலெக்சாந்தர் ஆகிய இருவரினதும் தளர்வற்ற கற்பித்தல் பணியினால் உருவாக்கப்பட்ட மரபுக் கவிஞர்களால் 2011 ஆம் ஆண்டு கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. குறைவான எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களைக் கொண்டுள்ள நிலையிலும் கவிஞர் கழகம் பல ஆக்க பூர்வமான செயற்பாடுகளைத் தொய்வின்றித் தொடர்ந்து ஆற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது. இலக்கியப் பணிகளுடன் பல ஆண்டுகளாக ஒவ்வொரு கிழமையும் கவிதைப் பயிற்சி வகுப்புகளையும் இலக்கியக் கலந்துரையாடல்களையும் கழகம் தொடர்ந்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கழகத்தின் ஆசானாகவும் காப்பாளராகவும் இருந்த பண்டிதர் மா. செ. அலெக்சாந்தர் அவர்கள் 2017ஆம் ஆண்டு இறை பதமடைந்தார். அவரது மறைவோடு அவர் ஆற்றிய பணி நின்றுவிடாது அதனைத் தொடர்ந்து எடுத்துச் செல்வதே அவருக்கு நாம் ஆற்றும் நன்றிக் கடனாக அமையும் என்ற தூய நோக்கோடு கவிதைப் பயிலரங்க வகுப்பை நான் பொறுப்பேற்றுத் தொடர்ந்து நடத்தி வருகின்றேன். கொரோனாப் பெருந்தொற்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பல அனர்த்தங்களை ஏற்படுத்தியிருந்தாலும் மறைமுகமாகச் சில நன்மைகளையும் விளைவித்துள்ளது. அதிலொன்றாக ZOOM செயலி உலகெங்குமிருந்து மக்களை மிக இலகுவாக இணைக்கின்ற ஒரு கருவியாக உருவெடுத்துள்ளதனைக் கூறலாம். இப்பொழுது கவிதைப் பயிலரங்கம் ஒவ்வொரு சனிக்கிழமையும் ZOOM செயலியூடாக நடைபெறுவதும் அதில் பிற நாடுகளிலிருந்தும் கூடக் கவிதையில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து பயனடைவதும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுக் கவிதைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுடன் ஏனைய இலக்கிய வடிவங்களையும் உள்ளடக்கியதாகக் காலாண்டுக்கு அல்லது அரையாண்டுக்கு ஒரு முறை இலக்கிய இதழ் ஒன்றை வெளியிட வேண்டும் என்பதைக் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் தனது முக்கிய செயற் திட்டங்களில் ஒன்றாக அதன் யாப்பில் ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால் அதனைச் செயற்படுத்துவதில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் ஆண்டுக்கு ஒரு முறையாவது இதழை வெளியிடவேண்டும் என்பதில் கவிஞர் கழகம் உறுதியாக இருக்கிறது.

2016 ஆம் ஆண்டு தைமாதம் எமது கழகத்தால் நடத்தப்பெற்ற தைப்பொங்கல் - தமிழ்மரபுத்திங்கள் விழாவின் போது முதலாவது வெளியீடாகக் "கவிச்சரம்" என்ற பெயரில் கவிதைகள் கட்டுரைகள் சிறு கதைகள் அடங்கிய இதழை வெளியிட்டு வைத்தோம். சேயோன் பிறின்ரேர்ஸ் நிறுவனமும் அதன் உரிமையாளர் திரு. சிறீ கண்ணுத்துரை அவர்களும் அவ்விதழை அச்சிடுவதற்கான செலவினை முழுமையாக ஏற்றுக்கொண்டு அழகான முறையில் அதனை அச்சிட்டு வழங்கியிருந்தார்கள் என்பதையும் நன்றியுடன் இவ்வேளையில் நினைவு கூர்தல் வேண்டும். அந்த இதழும் அதனைத் தொடர்ந்து வந்த இதழ்களும் எமது கழக உறுப்பினர்களினது சிறந்த ஆக்கங்களை எடுத்து வந்து வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இப்போது நான்காவது கவிச்சரம் இதழ் வெளிவர இருப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது. அத்துடன் என்னிடம் கவிதை பயின்ற மாணவர்கள் சிலரினது படைப்புகளுடன் அது வெளிவருவது இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

பல கவிஞர்களது கவிதைகள் கன்னிப் பதிப்பாக இந்நூலில் இடம் பெறுகின்றன. இதன் மூலம் இளங்கவிஞர்களது கவிதை படைக்கும் ஆற்றல் விருத்தியடைவதற்கு இவ்விதழ் ஒரு தூண்டுகோலாக அமையும் என்பதும் எனது கருத்து.

இந்த இதழுக்குச் சிறப்பாக அணி சூட்டி வெளியிடுவதற்குக் குறுகிய காலத்துக்குள் தங்கள் படைப்புகளை வழங்கியிருந்த கழக உறுப்பினர்களுக்கும் ஏனைய கவிஞர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப்பணியை கச்சிதமாக முன்னெடுத்துச் செயற்படுத்திய கழகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்க் குழு உறுப்பினர்கள் கவிஞர் திரு. குமரகுரு கவிஞர் திருமதி பவானி தர்மகுலசிங்கம் அருட்கவி திரு. ஞானகணேசன் ஆகியோருக்கும் தலைவர் திரு. கந்த சிறிபஞ்சநாதன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் நிதி அனுசரணை செய்த பெருமக்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்த்துகளுடன்,

மரபுக்கவி ஆசான்
பாவலர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா
(முன்னாள் தலைவர் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்)
டொரண்டோ, கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

பதினொரு ஆண்டுகளாக இயங்கி வரும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தினின் பைந்தமிழ்ப் பணிக்குத் தலை வணங்குகிறேன். நான் இளைஞராக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவராக விளங்கியவர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள். நாடு கடந்து இன்றும் கனடாவில் சிறப்போடு தமிழ்ப் பணியாற்றி வருகின்றார். அவர்கள் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தைத் தோற்றுவித்ததை அறிவேன். பழுத்தவொரு கவிஞர் போட்ட விதை கொழுத்த ஒரு மரமாக இன்று நிழல் தருகின்றது. இக்கழகத்தினர் ஆண்டு தோறும் நடத்தும் ஆண்டு விழா, இவ்வாண்டும் நடைபெறவுள்ளமை மகிழ்ச்சியாகும். இதில் வழமைபோல வெளிவரும் “கவிச்சரம்” இலக்கிய இதழுக்கு என் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மரபுக்கவிதை, புதுக்கவிதை என்ற சொல்லாடல்களில் நான் என் மனதை அலைக்கழிப்பதில்லை. ஏனெனில், புதுக்கவிதை கவிதையே அல்ல என்பது என் அழுத்தமான கருத்தாகும். பாரதியார், பாரதிதாசன், ஜெயகாந்தன், சுவாமி விபுலாநந்த அடிகளின் மாணவரான மாவிட்டபுரம் சச்சிதானந்தன், சாலை இளந்திரையன்......இவர்களெல்லாம் புதுக்கவிதையை கவிதை என்று ஒப்புக்கொள்ளவே இல்லை. ஆனால், புதுக்கவிதை என்பது ஒரு சிறந்த இலக்கியமாகும். பழமொழிகளின் வேரில் இது முளைத்தது.

பழமொழிகளும் கவிதை என்று சொல்பவரும் இருக்கிறார்கள். ஆனால் எந்த இடத்திலும் பழமொழி பா என்று அழைக்கப்பட்டதில்லை. உரைக்கு இன்னொரு சொல் மொழி. அதனால் அது பழமொழியானதே. பழமொழிக்கு மூதுரை என்று இன்னொரு சொல் உண்டு. நீளமானதும் குறுகியதுமான வடிவங்களில் புதுக்கவிதை இடம்பெறலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் புதுக்கவிதையை "பொழிச்சொல்" இலக்கியம் என்கிறேன். புதுக்கவிதை மேலை நாட்டில் இருந்து வந்தது என்று சொல்லப்படுவது இன்னொரு பொய்யாகும். ஓசைதான் கவிதை இலக்கணத்தின் வேராகும். இந்த ஓசை புதுக்கவிதையில் இல்லை. ஓசை கொண்ட சிறந்த இலக்கியமாக பா (கவிதை) இலக்கியம் திகழ்கிறது. இதை மரபுப் பா என்று சொல்லவேண்டிய தேவை இல்லை.

கவிதை இலக்கியத்தில் ஆர்வம் கொண்டு, கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஓசை கொண்ட பாக்களை இயற்றும் தமிழ்ப் பாவலர்களை ஊக்கப்படுத்தும் உங்கள் முயற்சிகளுக்கு, எனது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்,

கவிஞர் காசி ஆனந்தன்

தையூர், சென்னை,

தமிழ்நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் வெளியிடும் எழில்மிகு "கவிச்சரம்" என்ற பாச்சரத்தில் பொதிந்துள்ள பாப்பூக்களின் மத்தியில் இலைமடிப்பாக எனது செய்தியையும் சேர்த்திட வேண்டிய கழக நண்பர்களுக்கு நன்றி கூறி மடல் வரைந்து மகிழ்கின்றேன்.

வந்தேறிக் குடியமர்ந்த வளப்புமிகு கனடாவில் தொழில் புரிந்தோம், வாழ்ந்தோம் என்றுமட்டும் இல்லாது கவி யுலகில் சஞ்சரித்து, கவிமழை பொழிந்து அம்மழையில் நனையும் வாய்ப்பினை வாசகர்களுக்கு வாரியிறைக்கும் கவிஞர்களுள் ஒருவனாக அடியேனும் படைசேர்ந்தமை பெருமகிழ்வைத் தருகிறது.

"கடுகு சிறிதாயினும் காரம் பெரிது" என்ற முதுமொழிக்கேற்ப உருவத்தில் சிறிய கவிச்சரப் பேழையில் பதிவாக்கப்பட்ட மரபுக்கவிதைகளைப் படித்துப் பயனுறுங்கள். படித்ததை, அதனால் உணர்ந்ததை, வியந்ததை வெளிப்படுத்திப் படைத்தோரை ஊக்கப்படுத்துங்கள். அதுவே கவிஞர்களுக்கு வாசகப் பெருமக்களாகிய நீவீர் தரும் நீராகாரம். தேன்சுவை அமுதமும் அதுவே.

படைத்தோருக்கும், படிப்போருக்கும் பயனுறுவோர்க்கும் மனம் நிறைந்த வாழ்த்துகள். இதழாக்கி அழகிய தேராகப் பவனி யுறச்செய்த இதழாசிரியருக்கும், கழகத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் நிர்வாகசபை உறுப்பினருக்கும் அன்பு நிறைந்த வாழ்த்துகள். எம்மைச் செதுக்கிய ஆசான்கள் கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களுக்கும், அமரர் பண்டிதர் மா.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களுக்கும் நன்றி கூறி வணங்குகின்றேன். அவர்களின் நல்லாசிகள் என்றென்றும் எம்மை வழிகாட்டி வளம்பெற வைக்கும் வைரமாக மிளிரும்.

கவிஞர்க்கு வேண்டும் கணினி என்ற வேட்கையுடன் வாழ்நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்ற பாணியில் கற்பிக்கக் களம் தந்து வாழ்த்தவும் வழிசமைத்த கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு மீண்டும் நன்றி. அந்தக் கணினி வகுப்பில் பங்குபற்றும் அனைவருக்கும் பேரன்பு கலந்த வாழ்த்துகள்.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் செயற்பாடுகள் சீராகப் பயணிக்கின்றது. கழகத்தின் தலைவர் கவிஞர் கந்த ஸ்ரீ பஞ்சநாதன் அவர்களுக்கும், செயலாளர் கவிஞர் பவானி தர்மகுலசிங்கம் அவர்களுக்கும், பொருளாளர் கவிஞர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் அவர்களுக்கு உறுதுணையாகச் செயற்படும் அனைத்துக் கவிஞர்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவிக்கின்றேன். கழகத்தின் அதிமுக்கிய செயற்பாடாகிய யாப்பிலக்கண வகுப்பினைச் செவ்வனே நடத்திவரும் கவிஞர், கவியாசான் மாவிலி மைந்தன் சண்முகராஜா சின்னத்தம்பி அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

கவிச்சரம் சஞ்சிகையின் இந்த இதழினைச் சீருற அமைத்து அரும்பணியாற்றியுள்ள பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

நன்றி.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும்
நன்றாகவே வாழட்டும்

அன்புடன்,

பாவலர் அகணி சுரேஸ்

கணினி ஆசிரியர்
(முன்னாள் தலைவர் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்)
டொரண்டோ, கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

"கவிதை என்பது யாப்பு வடிவில் அமைந்து அறிவையும் கற்பனையையும் சேர்த்து, இன்பத்தை உண்மையோடு இணைத்து வைக்கும் கலை" என்பர் மேனாட்டு ஆய்வாளர். எட்கர் ஆலன்போ என்கின்ற அறிஞர் கவிதை ஒலிநயம் மிக்க உயர்ந்த படைப்பு என்கின்றார். இங்கே கவிதை எனக் குறிப்பிடப்படுவது யாப்பின் வழிநின்று படைக்கப்படும் செய்யுள் அல்லது மரபுக்கவிதை என்றே பொருள்படுகின்றது.

தொடர்பாடலுக்கெனத் தோன்றிய மொழி, பேச்சுவடிவமாக மட்டுமே நிலைபெற்ற தொடக்ககாலத்தில் இசையோடு கூடிய பாடல் என்ற முதல் இலக்கிய வடிவத்தையும் கண்டது. வாய்வழியாகத் தோன்றிய இவ்விலக்கியத்தை வாய்மொழி இலக்கியங்கள் என்றனர்.

தொடர்ந்து மொழி எழுத்து வடிவம் கொண்டபோது, வாய்வழியாகப் பாடப்பட்ட பாடல்களை எழுத்தில் பதிவு செய்தனர். அவ்வாறான பாடல்களில் ஒலிநயம் மிக்கதாக இருக்க வேண்டும் எனக் கருதி ஓசை, சந்தம் போன்றவற்றை ஒழுங்கமைவுக்குட்படுத்திப் பாடல்களை பாடுவதற்கெனக் கைக்கொண்டிருந்த மரபுகளைச் செப்பனிட்டு செய்யுளிலக்கணத்தை உருவாக்கினர். அதற்கு "யாப்பு" எனப் பெயரிட்டனர்.

எமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கும் தொல்காப்பியம் முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையான இலக்கியங்கள் வரை அனைத்தும் இந்த யாப்பு என்ற செய்யுளிலக்கணக் கட்டமைப்புக்குள் நின்றே உருவாக்கப்பட்டன.

"மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
    மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
    தனில்அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இந்த பாரதிதாசனின் வரிகள் கவிதையின் சிறப்பை மட்டுமல்ல, யாப்பு வடிவத்தின் சுவையையும் வெளிப்படுத்துகின்றன.

மேனாட்டு இலக்கியங்களின் பாதிப்புகளினால் தமிழ் நாவல், சிறுகதை, கட்டுரை, என்ற இலக்கிய வடிவங்களையும் புதுக்கவிதை என்ற யாப்பிலக்கணத்துக்குள் அடங்காத புத்தம்புதிய வசனகவிதை வடிவத்தையும் பெற்றது. இதனால் யாப்பிலக்கணத்துக்குட்பட்டு தொடர்ந்து எழுதப்பட்ட கவிதைகள் மரபுக்கவிதை எனப்பட்டது. இன்றளவிலும் இவ்விரு கவிதை வடிவங்களும் தமிழில் நிலைபெற்று இலக்கியச் செழிப்புக்கு வழிசெய்கின்றன.

கனடா மண்ணில் மரபுக்கவிதையின் தொடர்ச்சி, கட்டமைப்பு வழிநின்று பேணப்பட்டு வருகின்றமையும் அது தருகின்ற நிறைவை முழுமைப்படுத்துவதற்கும் மேற்கூறப்பட்ட கவிதை என்னும் இலக்கிய வடிவ வரலாற்றைப் புரிந்து கொள்ளுதல் சிறப்பானது.

கனடாவில் மதிப்புக்குரிய கவிஞரும் எழுத்தாளருமான திரு கந்தவனம், மறைந்த ஆசிரியர் பண்டிதர் மா.செ. அலெக்சாந்தர் என்ற இந்த இருவருடைய முன்னெடுப்பில் தோற்றம் கொண்டதுதான் கனடா தமிழ்க் கவிஞர் கழகம். இந்த இருவரும் யாப்பிலக்கண வகுப்புகளை நடத்தி, மிகச் சிறப்பாக மரபுக்கவிதை எழுதவல்ல கவிஞர் பலரை உருவாக்கினர். இந்தப் பணி, மரபுக்கவிதைக்கான ஒரு தலைமுறையை இந்த மண்ணில் உருவாக்கியிருக்கின்றது எனலாம்.

கனடா தமிழ்க் கவிஞர் கழகம் இந்த மண்ணில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் வலுவானதொரு இலக்கியக் கட்டமைப்பு என்றுதான் நான் குறிப்பிடுவேன். மேற்குறித்த இருவரினதும் தொடர்ச்சியாக யாப்பிலக்கண வகுப்புகளை நடத்துவதுடன் தொடர்ச்சியாகப் பல படைப்புகளையும் வெளியிட்டு வருகின்றனர். அவ்வாறானதொரு வெளியீடாக அமைந்ததுதான் இப்போது உங்கள் கையில் இருக்கும் “கவிதைகள் கவிச்சரம்” என்ற இந்தத் தொகுப்பு.

இந்தத் தொகுப்பில் கனடாவில் வாழ்ந்து வரும் இருபத்தொன்று கவிஞர்கள் வெவ்வேறு தலைப்புகளில் சிறந்த கவிதைகளை எழுதியிருக்கின்றார்கள். அத்தனை கவிதைகளும் யாப்பிலக்கணத்துக்குட்பட்டு எழுதப்பட்டிருக்கின்றமை சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் தாம் பின்பற்றிய யாப்பிலக்கண பாவகையைத் தலைப்புக்குக் கீழே குறிப்பிட்டிருக்கின்றமை பாவகைக்கேற்ப பாடல்களை வேறுபடுத்திச் சுவைக்க உதவுகின்றது.

கவிதைகள் பலவும் சிறப்போடமைந்து ஆங்காங்கே செறிந்த கருத்துகளையும் வாழ்வியல் உண்மைகளையும் விளக்கிச் செல்கின்றன. அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

கூடுகட்டும் நினைவுகள் என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் மாவலி மைந்தன் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

பெற்றே இழந்த பெருமைகளும்
பிரிந்தே போன உறவுகளும்
வற்றி வரண்ட குளமாக
வறுமை கண்ட இளவயதும்
உற்ற அறிவொன் றில்லாமல்
ஒளித்தே செய்த தவறுகளின்
குற்ற வுணர்வும் கூடியிங்கே
கூடு கட்டும் நினைவுகளே!

நீண்ட வாழ்வனுபவத்தின் பின்னர் ஆறவமர்ந்து நிகழ்வுகளை நினைவுகளாக மீட்க முயன்றால் பலருக்கும் இது பொதுவானதாகவே அமைந்திருக்கும். சரியா தவறா என முடிவெடுத்துச் செயலாற்றும் அறிவு இல்லாத வயதில் எத்தனை தவறுகளைச் செய்திருப்போம்? அழகாக மீட்டுப் பார்க்கின்றார் கவிஞர்.

உறுப்புத்தானம் என்ற தலைப்பில் கவிஞர் அகணி சுரேஸ் எழுதிய கவிதையில்,

"வறுத்த உடலாய்க் கருகும் முன்பு
வங்கி சேர்ந்திடுமே"
"ஆழ்ந்து தூங்கும் உங்கள் உடலும்
அருமை செய்திடுமே
வாழ்ந்து முடிந்த மரத்தின் இலைகள்
மண்ணின் வளமல்லோ!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வரிகள் உறுப்புக்கொடையின் சிறப்பை விளக்குகின்றன.

கனடாவின் மேன்மையைப் போற்றி, வாழவைத்த நாட்டை வாயாரப் பாடிடுவோம் என்ற தலைப்பில் அருட்கவி தம்பிஐயா ஞானகணேசன் எழுதிய கவிதையில்,

“பல்லின மக்களைப் பாரினிலே ஒன்றாக்கி
நல்லின மாக்கிய நாடிதுவே”. என்றும்
“சொந்தமண் காணாச் சுதந்திரப் பாணியிலே
இந்தமண் காணுதே ஏடுபல”

என்றும் குறிப்பிடுகின்றார். தாயகத்திலே சுதந்திரமாக எழுத முடியாது. இந்த மண்ணிலே எழுத்துச் சுதந்திரத்தோடு ஏடுகள் பல வெளிவருகின்றன என்கின்றார்.

கறுப்பு யூலை என்ற தலைப்பில் கவிஞர் மதிபாஸ்கரன் சந்த ஓசைகள் மிகக்கொண்டு எழுதிய கவிதையில்,

“எண்பத்து மூன்று ஆடி
இருபத்து மூன்று தேதி
தென்திசையின் ஈனர் கூடித்
தெருப்பேயைப் போல ஆடிப்
பண்பான தமிழர் நாடிப்
பல்வதைகள் செய்து வாட்டிக்
கண்ணெதிரே உறவை வெட்டிக்
களித்தநாள் கறுப்பு ஆடி”

எனக் கூறுகின்றார். கறுப்பு யூலை என்றால் என்ன வினாவுக்கு விடையாகவும் விளக்கமாகவும் அமைகின்றது இந்தக் கவிதை.

அன்பைத் தேடும் இதயங்கள் என்ற தலைப்பில் கவிஞர் ப. சயந்தன் எழுதிய கவிதையில்,

அகரத்தை நுகரும் போதே அறத்தை உணரவைத்து சிகரத்தில் சிந்தையினை ஏற்றுமே தமிழ்மரபு எனக் கூறுவதன் வாயிலாக தமிழ் பயிலும் போதே சிந்தையில் அறவுணர்வுகள் வேரூன்றத் தொடங்கி விடுகின்றன எனக் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துயிலும் இல்லத் தொட்டிலிலே தூங்கும் தியாகிகளை
தாயகத்து மண் அறியும் தம்முயிரைத் தந்தவரைத்
தினம்தேடும் உள்ளங்கள்தானறியும்"

என, மாவீர உணர்வுகளின் இன்றைய நிலையை வெளிப்படுத்துகின்றார்.

கனடிய மண்கண்ட கருணையிலாக் கொலைகள் என்ற தலைப்பில் குமரகுரு கணபதிப்பிள்ளை நல்லதொரு கவிதை வடித்திருக்கின்றார்.

மனிதத்தை அழித்திட்ட மாக்களது செயல்தன்னை
இனவழிப்பே இதுவென்று எடுத்துரைத்தார் மனிதநேயர்
கனமான நம்தலைவர் கவலையுடன் பகிர்ந்தாரே..

என கனடாவின் பிரதமர் இதை இனக்கொலை எனக் குறிப்பிட்டதைப் பதிவு செயகின்றார்.

இளவேனில் என்ற தலைப்பில் சுகந்தி மார்க்கண்டு எழுதிய கவிதையில் கனடாவின் இலைதுளிர் காலம் பற்றிய எண்ணங்களை அழகுற வெளிப்படுத்துகின்றார்.

"உயிரைப் புதைத்து உறைந்த மரங்கள்
துயிலின் நீங்கி துயர் விடவே.."

"வலசையால் மீண்டு வந்த பறவைகள்
குலவிடும் உறவுகள் குதூகலம் கொள்ளும்"

போன்ற கவிவரிகள் இளவேனில் நிகழ்வுகளைக் கவி உணர்வோடு சுட்டிச் செல்கின்றன.

மூத்தோர் நாட்டின் முதுகெலும்பு என்ற கவிதையில் திருமதி நாகேஸ்வரி சிவகுருநாதன் மூதாளர்களின் சிறப்பையும் அவர்களைப் பேண வேண்டிய சமூகப் பொறுப்பையும் கவிதை மூலம் உணர்த்துகின்றார்.

முதியோர் என்போர் முதிர்ந்த அறிவுடையோர்
நதியின் அறிவுடன் நிலத்தினிலில் திகழ்வோர்
மதியுள் ளவர்கள் மதித்து நடந்தால்
எதிலும் இன்பமாய் ஏற்றமுற வாழ்வாரே!

என்ற வரிகள் மூதாளரின் மேன்மையை உணர்த்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிர்கின்ற இலைகண்டு உழல்வதில்லை விருட்சங்கள் என்ற தலைப்பில் திருமதி பாவானி தர்மகுலசிங்கம் நம்பிக்கை மிக்க வாழ்வின் சிறப்பை வலியுத்துகின்றார்.

வாழ்க்கையெனும் தேரதனை வண்ணமுற வடம்பிடித்து
ஆழ்ந்தவுயர் அறிவுகொண்டு அடக்கத்தைக் கடைப்பிடித்தால்
தாழ்ச்சியென்றும் நெருங்கிடாது தாளாண்மை கொண்டுநீயும்
சூழ்கின்ற துயர்போக்கத் துணிவுடனே செயற்படுவாய்!

என்ற கவிதை, அறிவும் அடக்கமும் வாழ்வில் உய்த்தேற உயர்வான வழிகள் என்பதை வெளிப்படுத்துகின்றன.

எங்கள் குலதெய்வம் என்ற தலைப்பில் கவிஞர் மார்க்கம் சந்திரன் எழுதியிருக்கும் கவிதை விநாயகரைப் போற்றும் இன்னிசை வெண்பாவாக அமைந்திருக்கின்றது.

வெண்பாவிலோர் வீரக்காதல் என்ற தலைப்பில் கவிஞர் மேரி ஞானப்பிரகாசம் மண்ணுக்காய்ப் போராடும் வீரனின் காதல் உணர்வை அழகுற வெளிப்படுத்துகின்றார்.

காதலோடு நாடு காக்கும் காலச்சிந் திப்பிலாழ்ந்தேன்.
காதலாம் காமம் களவுகற்பு நற்சுவையே!
நான் தமிழன் நம்மவர்க்கோர் நாடுகேட்டுப் போராடி
நான் இறந்தால் பூக்குமா நாடு!

என்ற வரிகள் ஒரு வீரன் பெண்ணையும் மண்ணையும் காதலிக்கும் மனவுணர்வை வெளிப்படுத்துகின்றது.

மூத்த கவிஞர் வே. ராஜலிங்கம் அவர்கள் வயலெலாம் மறையென ஆகிடுமே என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் மழை சிறக்க, மண் பொலிந்து உழவு பெருக, சிறக்கும் தாயக வாழ்வின் அழகை அறுசீர் விருத்தத்தில் சிறப்புறச் செப்புகின்றார்.

கதிரெழும் வயலெலாம் காரிகைபோல்
கழுத்தெலாம் மண்ணினை வணக்கமிடும்

என்ற வரிகள் உழவர்கள் உணர்வைப் பதிவு செய்கின்றன.

“மனிதர்கள் மண்தன்னில் மாறுவாரா?” என்ற தலைப்பில் கந்த. ஸ்ரீ பஞ்சநாதன் எழுதிய கவிதை, தமிழரின் மரபுவழிப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவழிபாட்டுக் கோட்பாட்டை வலியுறுத்தி, இடையே ஏற்பட்ட சிதைவுகளை நீக்கி வாழ வேண்டும் எனக் கூறுகின்றது.

அன்று வந்த அந்தணர்கள் ஆழமாயச் சிந்தித்து
நன்றாகச் சாதியினை நானிலத்தில் பிரித்துவிட்டார்
அன்றுவிட்ட பிழையைநன்கு அறிவுகொண்டு சீர்தூக்கி
மனம்தன்னை மாற்றினாலே மகிழ்வாக வாழலாமே

என்ற வரிகள் சிறப்புப் பெறுகின்றன.

நல்லாசான் மீதுகொண்ட நன்மதிப்பு என்ற தலைப்பில் களப்பூரான் தங்கா எழுதியிருக்கும் நேரிசை வெண்பா, கவி கற்பித்த ஆசான்களான திரு மா.செ.அலெக்காண்டர் கவிஞர் கந்தவனம் ஆகியோரைப் போற்றுவதாக அமைந்திருக்கின்றது.

இத்தனைக்கும் நாங்கள் எதுவரைக்கும் கற்றோமோ
அத்தனையும் வித்தகர்கள் அன்பளிப்பே

என தன்னடக்கத்தோடு வெளிப்படுகின்றது தங்காவின் கவிதை.

மேற்குறிப்பிட்ட கவிஞர்களுடன், முருகேசு மயில்வாகனம், இராஜ்மீரா இராசையா, கனி விமலநாதன், சோக்கல்லோ சண்முகம், கொக்குவில் சிங்கன், முரளீதரன் நவரட்ணம், மரு. செல்வி முருகேசன் போன்றோரும் நல்ல கவிதைகளைத் தந்திருக்கின்றனர்.

முன்னரே குறிப்பிட்டதைப் போல, இருபத்தொரு கவிஞர்கள் தமது உணர்வுகளை அழகுற வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் தேர்ந்தெடுத்த தலைப்புகளில் தமக்கேயுரித்தான சிந்தனையோட்டத்தில் தம் உணர்வுகளை வெளிப்படுத்தி யுள்ளனர். எதிர்காலத்தில் மேலும் பயனுறு தலைப்புகளை இவர்கள் தேர்ந்தெடுத்து எழுத வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

இந்தநூல் யாப்பின் வழியில் கவிதைகளை எழுத முற்படுவோருக்கு நல்லதொரு வழிகாட்டியாகவும் அமையும். இக்கவிஞர்களுள் சில இளையோரும் உள்ளடங்கியிருக்கின்றனர் என்பது மகிழ்வைத் தருகின்றது. மரபுசார் கவிதை தாயகத்தில் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது என்பதில் ஐயமில்லை எனினும் புலம்பெயர்ந்தோர் வாழ்புலத்தில் மரபைப் பேணிச்செல்லவல்ல இளையோரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதே இன்றைய கவிஞர்களின் பணியாகும். கனடா கவிஞர் கழகம் இப்பணியைச் செய்து வருகின்றது என்பது நிறைவைத் தருகின்றது.

இந்நூலின் வாசகர்களே! இதில் இடம்பெற்றிருக்கும் கவிதைகள் பல, இன்புற வாசிப்பதற்குகந்தவை. ஆழப்பொருள் கொண்டவை. உங்கள் வாசிப்புக்குப் பின்னர் இந்தப் படைப்பாளர்களுக்கு நீங்கள் ஊக்கம் கொடுக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

வளரட்டும் மரபுவழிக் கவிதைகள்!

சிறக்கட்டும் எம் கவிஞர்கள்.

பொன்னையா விவேகானந்தன்

விரிவுரையாளர் - டொரண்டோ பல்கலைக்கழகம்,
அண்ணாமலை கனடாவளாகம்
பன்மொழிக் கல்வித்திட்ட அலுவலர் (பணிநிறைவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புரை

பல்வகைப் பூக்களின் தொகுப்புப் பூச்சரம் ஆவது போல பல வகையிலான பல கவிதைகளின் தொடுப்புக் கவிச்சரமாகிறது. கவிதை என்பது இதயத் துடிப்புகள் வரையும் எழிலோவியம். அது உணர்வுப் பிழம்புகளின் அணிவகுப்பு. பூத்துக் குலுங்கும் பூஞ்சோலை போல மனச் சோலையை மகிழ்விக்கும் மாணிக்கப் பரல்கள். ஆயிரம் வாசல் இதயம் பூக்கும் அதிசய மின்னல்கள்.

உள்ளத் துள்ளது கவிதை – இன்ப
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தேர்ந்து ரைப்பது கவிதை

என்பது கவிமணியின் நவமணிச் சரம்.

கிளிஞ்சல்கள் ஒதுங்கும் கரையை விடக் கடலுக்குள் ஆழத்துக்குள் செல்லச் செல்ல முத்துகளும் பவளங்களும் விலைமதிப்பற்ற ஏனைய பொருள்களும் ஏராளமாகப் புதையல் போல அள்ளி அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கும். அது போல அனுபவ நிலையில் அமைகின்ற கவிதைகள் கைப்பக்குவம் போல, நுட்பம் உணர்ந்த சிற்பியைப் போல அழகும் உணர்வும் கருத்தும் கனிவும் அருள் ஒழுகும் தெய்வீக இயல்பினைப் போல பழகிய கைவண்ணம் பளிச்சிடும் அழகு தமிழில் இந்தக் கவிதைகள் அமைந்துள்ளன. மரபும் புதிதும் மணம்போல கலந்துறவாடுகின்றன. இன்பமும் துன்பமும் பகல் இரவு போல பரிணமிக்கிறது.

இக்கவிதைகள் அனைத்தும் அழகு துளிர்ப்பில் ஆர்ப்பரிக்கின்றன. உண்மை என்னும் ஒளிச்சுடரை உமிழ்ந்து கொண்டிருக்கின்றன. கற்பனை வளரும் கருத்துச் செறிவும் பின்னிப் பிணைந்து படிப்பவர்க்குப் பாசமலராகிறது. எண்ணங்களின் புதையலாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணங்கள் துள்ள விண்ணில் மின்னும் வண்ண மீன்கள் போல் கோலம் புனைகின்றன.

மகிழ்ச்சியில் சில கவிதைகள் மடைதிறந்த புதுவெள்ளம் போல் துள்ளிக் குதிக்கின்றன. சில கவிதைகள் துன்பவலையில் துவளும் உணர்வுகளைத் தொட்டுத் துவண்டு கிடக்கின்றன.

இக்கவிதைகள் மனிதச் சந்தையில் மலிந்து கிடக்கும் சிந்தனைகளைத் தாங்கிச் சிறகடித்துப் பறக்கின்றன. இடியும் மின்னலும் மழைக்கு முன்னோடி என்பதைப் போல விடுதலை உணர்வுகள் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் ஓலக்குரலும் வெளிப்படக் காணலாம்.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் தொகுத்தளிக்கும் இந்தக் கவிச்சரம் 2023 இல், 21 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. உலகளவில் பரவலாகக் கவிஞர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இறந்த பின்னர் வீணாகும் உடலின் உறுப்புகளைத் தானம் செய்து இறந்த பின்னரும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித நேயத்தை ஒரு கவிதை உரைக்கின்றது. மானுடப் பிறப்பின் மகத்துவத்தையும் இறந்த பின் வாழும் இறவாமையையும் உரைக்கிறது.

> "வீழ்ந்த பின்பும் உதவும் வாய்ப்பை
> விருப்பால் ஏற்போமே"

என்பது இறந்தும் வாழும் சிறப்பினது.

வாழவைத்த நாட்டை வாயார வாழ்த்துவதாக ஒரு கவிதை. பிறந்தது ஒரு நாடு என்றாலும் புகுந்து வாழ இடம் கொடுத்த நாட்டை மறக்காமல் போற்றக் காணலாம்.

> "பல்லின மக்களைப் பாரிலே ஒன்றாக்கி
> நல்லின மாக்கிய நாடிதுவே"

என்று வாழவைத்த கனடா நாட்டை வாழ்த்துவது ஒரு கவிதை.

1983 ஆடி 23இல் இலங்கையில் நடந்த இனப்படுகொலையைத் துக்கத்துடன் துளாவுவது கறுப்பு ஜீலை என்னும் கவிதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் போரில் வீழ்ந்த வரலாற்றைப் 'புனிதப் போர்' என்றே குறிப்பது வரலாற்று நிரலாறு.

"பணிவுற்றோர் பெற்றார் வெற்றி
பகைத்தோரைக் கொன்றார் வெட்டி"

என்று மனித நேயம் ஓடி மறைந்த நாள்களை உணர்த்துவது ஒரு கவிதை கறுப்பு ஆடி.

உலகிலேயே தொன்மையான மக்கள் தமிழ்க்குடி. அதற்குச் சான்று குமரிக்கண்டம். தமிழ் மக்களின் நாகரிகத்தைப் போன்றது உலகில் பழைமையானதாகக் கருதப்படும் சுமேரிய நாகரிகம் என்பதைச் சுட்டும் ஒப்புமைக் கவிதை ஒன்று. சுமேரியாவில்,

"சுட்ட களிமண்ணாற் சட்டிகள் பொம்மைகள்
நட்டார் தமிழ்ப் பெயரும் நன்று"

என்று சுமேரியாவில் இருந்தது தமிழ் நாகரிகமே என்பதை அடையாளம் காட்டுகிறது தமிழரது சில தடயங்கள்.

இயற்கையின் எழிலை இறைவனாகக் காண்பது ஒரு கவிதை. சூரியனுடைய செவ்வொளி அதுவே இறைவனுடைய மெய்வண்ணம். அவ்வண்ணமே சிவன் என்னும் செம்பொருள். அவன் படைப்பில் எல்லோரும் சமம் என்பதை எடுத்துக்காட்டுவது இந்தக்கவிதை. இந்த மனிதர்கள் மண்தன்னில் மாறுவரா? என்ற தலைப்பில் வந்துள்ளது.

எல்லோரும் சமனென்ற இறைவனாரின் கோட்பாட்டை
நல்லோர்கள் ஒன்று சேர்ந்து நாணயமாய்க் கைக்கொண்டு"

என்று வேற்றுமை காணாத தமிழர் மாண்பைப் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் திருவள்ளுவத்தில் காண்கிறோம்.

சமணசமயத்தின் ஒரு பிரிவாகிய ஆசிவகமும் அதனைத் தோற்றுவித்த மற்கலியரும் மற்றொரு கவிதையில் இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம். ஆசு + ஈவு + அகம் என்னும் கவிதை ஆசிவகத்தின் அடிப்படையை விளக்குகிறது.

"மற்கலியர் பூரணர் மாண்புடை நற்கணியர்
உற்றி வொன்றாய் இணைய உதித்ததை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிதை உணர்த்துகிறது. நியதிக் கொள்கை நெடிய வாழ்வு பெறுகிறது.

புத்தாண்டு பிறக்கட்டும் புத்துணர்வு மலரட்டும் என்னும் நீண்ட தலைப்பில் ஒருகவிதை. புத்தாண்டு என்பது எல்லாருக்கும் மகிழ்ச்சியளிக்கும் செய்தி. பொதுவாகப் புத்தாண்டில் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பது வேட்கை.

"அன்புநெறி தழைக்கட்டும் அகிலம் மகிழட்டும்
துன்பங்கள் தொலையட்டும் தூயவர்கள் வெல்லட்டும்"

என்று உலகமாந்தர் நலம் நாடும் உன்னதக் கவிதை இது.

அன்பைத்தேடும் இதயங்கள் அடையாளமாவது ஒருகவிதை. மலரைப் பிய்த்து எறிவதைப் போல சிதைக்கப்பட்டமக்கள் வாழ அடைக்கலமாக கனடா அமைந்ததைச் சுட்டிக்காட்டுகிறது.

"ஒன்றான மலர்ச்செடியாய் வாழ்ந்திருந்த தேசம் விட்டு
பிய்த்து எறியப்பட்டுச் சிதறிநாம் போனாலும்"

அன்பைத்தேடும் இதயமாகி ஆற்றாமல் அழுதலன்றி வேறு என்ன செய்ய முடியும்? என்று அழுதலின் முனகலாக அமைந்த கவிதை இது. ஏக்கத்தை விழிகளில் தேக்கி வைத்திருக்கும் கவிதை.

கனடிய மண்கண்ட கருணையிலாக் கொலைகள் என்பது ஒரு கவிதை. இரத்தத்தை உறைய வைக்கக்கூடிய செயல் ஒன்று சுட்டப்படுகிறது. புத்த சமயம் ஆட்சி செய்யும் இலங்கையில் நடைபெற்ற இனக்கொலையைப் போல கிறித்தவ சமயம் செழிக்கும் கனடாவில் பழங்குடி இனம் அழிக்கப்பட்டதைச் சுட்டும் கண்ணீர்க் கவிதை.

"பூர்விகக் குடிமக்கள் புத்திரரை அழைத்துவந்து
பாரெலாமும் பறைசாற்றிப் பராமரித்த சிறுவர்களை
பேரிடியாய்ப் புதைகுழியில் பெட்டையர்போல் கொன்றொழித்தார்"

என்பது மனிதப் பண்பாட்டின் மரணமாக ஒலிக்கிறது. "பெட்டைப் புலம்பல்" என்று சொன்ன பாரதியாரை நினைவுபடுத்துகிறது.

காதல் செய்வீர் என்றொரு கவிதை. மனித வாழ்வின் சமூகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியின் வேராக இருப்பது காதல். இக்கவிதையின் எழுத்துரு திறக்கவில்லை என்பதால் செய்திகளை அறிந்து கொள்ள இயலவில்லை. அதற்காக வருந்துகிறேன்.

இளவேனில் காலத்தை வரவேற்பது மனிதகுணம் அது வசந்தத்தை வாரிக்கொண்டு வருவதை நினைவுபடுத்துகிறது.

"தேனிலும் இனிதாய்த் தித்திப்புத் தந்த
வேனிற் காலமும் விரைந்து கழிந்ததே"

என்று கவிதை விரிந்து பருவ கால பாசத்தை ஊட்டுகிறது.

திருக்குறள் பெரியாரைத் துணைக்கோடல் (அதி.45), பெரியாரைப் பிழையாமை (அதி.90) என இரு அதிகாரங்களில் மூத்தோர் நலம்பற்றி உரைப்பதைக் காணலாம். மூத்தோர் நாட்டின் முதுகெலும்பு என்றொரு கவிதை. முதிர்ந்த அறிவுடைய அவர்கள்,

"நதியின் இயல்புடன் நிலத்தினில் திகழ்வோர்
மதியுள்ளவர்கள் மதித்து நடந்தால்
எதிலும் இன்பமாய் ஏற்றமுற வாழ்வரே"

என்று இளையோர் எழுந்து நிற்க முதுகெலும்பாகும் முதியோரை அடையாளமாக்கும் கவிதை இது.

உதிர்கின்ற இலைகண்டு உழல்வதில்லை விருட்சங்கள் என்பது மற்றொரு கவிதை. இலைகள் உதிர்வதைக் கண்டு துவழாமல் விருட்சங்கள் புதிய இலைகளைத் துளிர்த்துக் கொண்டு புத்தெழுச்சிப் பெறுவதைப் போல மனிதர்களும் வழ்ந்துகாட்ட வேண்டும்.

"தாழ்ச்சியென்றும் நெருங்கிடாது தாளாண்மை கண்டுநீயும்
சூழ்கின்ற துயர்போக்கத் துணிவுடனே செயற்படுவாய்"

என்பது அக்கவிதை தரும் எழுச்சி.

வாய்மை என்றொரு கவிதை. திருக்குறளில் வாய்மை என்பது ஓர் அதிகாரம் (30). யாதொன்றும் தீமை இல்லாத சொல்லே வாய்மை என்னும் குறளை அறமாகக் கொண்டு,

"அன்பாய் மொழிபேசி ஆதரவு காட்டியே
துன்பகற்றும் நல்வார்த்தை சொல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வாய்மைக்குத் தேரோட்டம் நடத்துகிறது.

பழைமையில் கால் ஊன்றி புதுமையில் பறக்க வேண்டும் எனச் சுட்டுவது புதியதோர் உலகம் செய்வோம் என்னும் கவிதை புதுமை விண்ணிலிருந்து விழுவதன்று; மண்ணிலிருந்து தோன்றுவது. பணமும் பொருளும் பகட்டும் அதனைத் தருவதில்லை.

"உழைப்பவன் உயர்வது நல்லுலகில் நடக்கட்டும்
செயற்கை குறைந்து இயற்கை இணையட்டும்"

என்று இயற்கையோடு இணைந்த உழைப்பைச் சுட்டுதல் அருமை.

குளக்கரை மாமருது விநாயகரை வழிபடுவது ஒரு கவிதை. விளக்கேற்றி வழிபட்டால் விக்கினம் போக்கும்,

"துதிக்கைப் பகவனை வேண்டினால்
நீக்குவான் மாறிடா நோய்"

என்று நம்பிக்கை ஊட்டுவது சிறப்பு.

இளவயது கோலங்களின் எழுச்சியாக இருப்பது கூடுகட்டும் நினைவுகள் என்னும் கவிதை. முதுமையின் நிழலாகும் இளமையை நினைவுகளால் பின்னுகிறது.

உற்ற அறிவொன் றில்லாமல் ஒளித்தே செய்த தவறுகளின்
குற்ற உணர்வும் கூடியங்கே கூடு கட்டும் நினைவுகளே"

என்று நினைவுகளைத் தாலாட்டுகிறது இந்த நெஞ்சக் கவிதை. அனைவருடைய குருதி நாளங்களையும் சுண்டிப்பார்க்கும் சுருதி யோட்டம் வெண்பாவிலோர் வீரக்காதல்.

"நான் தமிழன் நம்மவர்க்கோர் நாடுகேட்டுப் போராடி
நான் இறந்தால் பூக்குமா நாடு"

என்று கேட்பது புரிகிறது. வீர மரண வெற்றியை இந்தக் காதல் காமம் களவு கற்பு எல்லாம் தருமா என்று எண்ணத்தைத் தூ ண்டி புதை பட்ட எண்ணங்களில் விதையாகப் புதைப்பதை வீரக் காதலின் சாதனையாக்குகிறது.

அயலெல்லாம் மறையென ஆகிடுமே என்று மயலூட்டும் கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்று. இல்லறக் குடும்பமே நல்லறக் கோயில் என்று உணர்த்துவது இந்தக் கவிதை. ஆம்.

"அதிசயம் நடந்திடும் அன்பு இல்லம்
அளிக்குமே இல்லறம் இன்பவெள்ளம்"

என்று மருத நிலத்தை விருந்தாக்கி மகிழ்கிறது.

நல்லாசான் மீது கொண்ட நன் மதிப்பு. அது அலெக்சாண்டர் மீது கொண்ட அன்பின் மதிப்பாக மலர்ந்துள்ளது.

"முன்னர் நாம் செய்த முழுவினையின் நற்பயனே
பின்னர் நாம் கண்ட புலவுகளே"

என்று குருபக்திக்குக் கோயில் எழுப்புகிறது. முன்வினைப் பயனின் நம்பிக்கை விதையைத் தூவுகிறது.

அப்பப்பா...... தமிழ் முருகனைப் போல உலகத்தையே சுற்றி வந்த ஒரு மலைப்பு. ஒரு திகைப்பு. ஒரு வியப்பு. சமூகத்தைச் சுமுகமாக மாற்றும் மாட்சி. சமுதாயம், இலக்கியம், ஆன்மீகம், வரலாறு, இயற்கை, மனிதநேயம், இன்பத்தொட்டில், துன்பத்தோரணம் என அனைத்து நிலைகளும் அலசப்பட்டுள்ளன.

உலகை அச்சுறுத்தும் இனக் கொலைகள் சமயங்களின் பெயராலேயே அரங்கேறக் காண்கிறோம். வீழ்ச்சியைக் கண்டு வீழ்ந்து விடாமல் நம்பிக்கை என்னும் நாரைப் பற்றிக் கொண்டு அண்ணாந்து பார்த்து வானத்தை நோக்கி வலம் வரச் செய்கிறது. மனிதநேயத்தை மதிக்கத் தூண்டுகிறது. வாழ்ந்தால் மானத்தோடு வாழவேண்டும் இல்லையேல் வீர மரணத்தின் ஊர் வலத்தைத் தழுவ வேண்டும் என்று வீரவாழ்வின் வெளிச்சத்தை விதைக்கிறது. விவேகத்தை ஊட்டுகிறது,. வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகிறது.

எப்பொருளும் கவிதையாகலாம். இதயம் சிவிகை யாகலாம். வாய்மைப் பேச்சும் தூய்மை மனமும் கொண்டால் தொடுவானம் கூட சுட்டுவிரல் தூரம் தான் என்று சிகரம் நோக்கும் சிந்தனைகளை விதைத்திருக்கின்ற நண்பர் கவிஞர் குமரகுரு கணபதிபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிட்ட அத்தனை கவிஞர்களுக்கும் அன்பு வாழ்த்துகள். தொடர்ந்து எழுதுக. வெற்றிவாகை சூடுக. கனடாத் தமிழக் கவிஞர் கழகம் ஆற்றும் பெரும்பணி தரணியை ஆளட்டும்.

கவிமாமணி, முனைவர் குமரிச்செழியன்

தலைவர், பாரதிகலைக் கழகம், சென்னை.
4/5, முதல் குறுக்குத்தெரு, சானகிராமன் காலனி,
வில்லிவாக்கம், சென்னை - 600 049.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செயலாளரிடமிருந்து ...

எமது மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில், தமிழ்க் கவிஞர்களுக்காக முதன்முதலாக உருவாக்கப்பட்ட அமைப்பாக விளங்கும் எமது கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் செயலாளராகக் கடந்த இரு ஆண்டுகளாகக் கடமையாற்றக் கிடைத்த பேற்றினையிட்டு மிகவும் பேருவகையும் பெருமிதமும் அடைகிறேன்.

எங்கள் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய கவிநாயகர் கந்தவனம் மற்றும் மறைந்த அமரர் பண்டிதர் அலெக்சாந்தர் ஆகியோரின் எண்ணக் கருவில் உருவாகிய இக்கழகமானது, 20. நவம்பர். 2011 இல் நிறுவப்பட்டது.

எமது உறுப்பினர்களின் அயராத உழைப்பினாலும், விடா முயற்சியினாலும் மிகக் குறுகிய காலத்தில் அமைப்பானது மாபெரும் வளர்ச்சி கண்டு உயர்ந்தோங்கியது எனக் கூறின் அது மிகையாகாது.

அந்தவகையில் 11.10.2020 இல் தொடங்கி இன்றுவரை பயணித்த எனது செயலாளர் பணியின்போது நிறைவேறிய பல முன்னேற்றகரமான விடயங்களை இங்கே குறிப்பிட விழைந்துள்ளேன்.

தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக, உலகப் பெருந்தொற்றினால் எமது செயற்பாடுகள் யாவும் மெய்நிகர் (Zoom) வழியாகவே நடைபெற்று வருகின்றன. அதன்படி எம்மால் நிகழ்த்தப்படும் யாப்பிலக்கணக் கவிதை வகுப்பும் அதன்வழியேதான் தொடர்கிறது.

எமது கழகத்தின் முன்னைய தலைவரும், இன்றைய ஆசிரியருமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிலி மைந்தன் திரு சி. சண்முகராசா அவர்கள் இந்த வகுப்பினை மிகவும் சிறப்பான வகையில் நடத்தி வருகின்றார்.

எங்கள் பிறிதொரு முன்னாளைய தலைவரான திரு அகணி சுரேஸ் அவர்கள் கணினி வகுப்புக்களை எமக்குப் பெரிதும் பலன் தரும் வகையில் கற்பித்து வருகிறார்.

கனடா மாத்திரமன்றிப் பல்வேறு நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இவ்விரண்டு வகுப்புக்களிலும் பங்குபற்றிப் பயனடைகின்றனர்.

நாம் இடையிடையே பல கல்விமான்களையும், கலைஞர்களையும் அழைத்துச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறோம். பன்னாட்டு மக்களும் இவற்றிற் கலந்து, கேட்டு மகிழ்கிறார்கள். அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

31.10.2020	பேராசிரியர் திரு ந. சுப்ரமணியன் ஐயர் இலக்கிய, இலக்கணங்களுடன், பல சங்ககாலப் பாடல்கள்.
20.03.2021	முனைவர் திரு பசுபதி - வெண்பாவும் தலைப்பும்.
24.04.2021	மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை - கூத்தும் மரபும், இன்றைய நிலையும்.
08.05.2021	தேசபாரதி இராசலிங்கம் - சிறப்புக் கவிதைகளின் பங்களிப்பு
29.05.2021	முனைவர் திருமதி கௌசல்யா சுப்பிரமணியன் ஐயர்- கலிப்பாவும் பாவகைகளும்.
25.09.2021	எழுத்தாளர் திரு குரு.அரவிந்தன் - சிறுகதை நாவல் உரையும், கலந்துரையாடலும்.
26.02.2022, 12.03.2022, 26.03.2022, 09.04.2022	இலக்கிய மாமணி பேராசிரியர் சே.பானுரேகா - புறநானூற்றுக் காட்சிகள் - 1, 2, 3, 4.
28.05.2022	திரு சண்முகநாதன் (சொக்கலோ சண்முகம்) - வில்லுப் பாட்டுப் பற்றிய சொற்பொழிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கழக உறுப்பினர்கள் கிழமைதோறும் கீதவாணி வானலையில் கவியரங்கம் படைத்து வருகின்றனர். இது தவிர்ந்த வேறு பல நிகழ்ச்சிகளிலும் கவிமழை பொழிந்து வருகின்றனர்.

இவ்வாறான நிகழ்ச்சிகளாக:

ஈழத்தாய் ஒளிபரப்புச் சேவை நிறுவனத்தினருடன்:	
14.01.2021, 15.01.2021	தை மரபுத்திங்கள்
10.05.2021, 09.05.2021	அன்னையர் தினம்
18.05.2021	மே பதினெட்டு, முள்ளி வாய்க்கால்
2021, 2022	தந்தையர் தினம்
08.03.2022	சர்வதேச மகளிர் தினம்

ஆகியவற்றில் கவிதைகள் பாடிச் சபையோரை மகிழ்வித்தனர்.

தமிழர் குடியுரிமைச் செயலகத்தினின் நிகழ்வுகளாக,

31.01.2021 - "தாயகத்தின் அண்மைக்கால நிலைமை" என்னும் தலைப்பிட்ட கவியரங்கிலும்,

11.12.2021- இல் பாரதியார் நினைவு நிகழ்ச்சியையொட்டி நடத்தப்பட்ட கவியரங்கிலும், பங்குபற்றிக் கழகத்துக்குப் புகழ் சேர்த்தனர்.

மேலும்,

17.07.2021 - திரு. காமராசர் அவர்களின் 118வது அகவை விழா.

13.09.2021, 27.09.2021 திகதிகளில் மாபெரும் விஞ்ஞானி திரு. அப்துல்கலாம் அவர்களின் நினைவு விழா.

ஆகிய நிகழ்ச்சிகளில் கவியரங்கங்கள் செய்ததுடன், மேலும் சில உலகசாதனை நிகழ்ச்சிகளிலும், உரையாடல்களிலும் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பட்டறை இலக்கியப் பேரவையின்,

04.09.2021 - "வானும் வசப்படும்" தலைப்பிலும்,

12.09.20021 - பாரதி விழாவிலும், எமது உறுப்பினர்கள் கவிதை பாடினார்கள்.

ஜேர்மனியில் இயங்கும் எஸ்.ரீ .எஸ் தமிழ்த் தொலைக் காட்சியினரின், "இன்பத் தமிழும் நாமும்", "காவியம் படைத்த கண்மணிகள்" மற்றும் "அன்பைத் தேடும் இதயங்கள்" ஆகிய தலைப்புகளிலும் கவிதை பாடிக் களிப்புற்றனர்.

தமிழாழி தொலைக்காட்சி நிறுவனத்தினரின்,

19.06.2021 - தந்தையர் தினம் மற்றும்,

25.06.2022 - திருமண வாழ்த்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

23.01.2022 - தமிழ் மரபுத் திங்கள் விழா - கவியரங்கத்தில் ஆண்கள் அணியாகவும், பெண்கள் அணியாகவும் வெவ்வேறு தலைப்புக்களில் எமது கழக உறுப்பினர்கள் பங்கு பற்றி விழாவினை மேன்மைப்படுத்தினார்கள்.

30.04.2022- பொய்யாவிளக்கு திரையிடல் நிகழ்ச்சி- வாழ்த்துப் பாடல்கள் வழங்கினர்.

தேசபாரதியின் பாடலும், தேடலும் கவிதை பாடிச் சிறப்பித்தார்கள்

இவை மட்டுமல்ல. இக்கால கட்டத்தில் அமைப்பானது, மேலும் சில நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளது.

08.05.2021 அன்று தேசபாரதி இராசலிங்கம் அவர்களுக்கு 60 ஆண்டு இலக்கியப் பணியையிட்டுப் பாராட்டுவிழா நடத்தினோம்.

10.07.2021இல் எமது கவிச்சரம் வெளியீட்டு விழாவின்போது எங்கள் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய கவிநாயகர் கந்தவனம், அமரர் அருள் சுப்பிரமணியம், தேசபாரதி இராசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோருக்கு முறையே இலக்கிய வித்தகர், குழந்தைக் கவி வித்தகர், விருத்தக்கவி வித்தகர் என்னும் விருதுகள் வழங்கி மதிப்பளித்தோம்.

28.10.2021 - கழகத்தின் காப்பாளர், கவிநாயகர் கந்தவனம் ஐயாவின் பிறந்த நாளை மெய்நிகர் வழியாக அவருடன் இணைந்து, கவிதைகளால் வாழ்த்தி, மிகவும் சிறப்பாகக் கொண்டாடினோம்.

11.12.2021 - "Frontline Community Center" இல் நாம் நடத்திய ஒன்று கூடலில் பல பொது மக்களும் கலந்து கொண்டனர். மதிய உணவும் பரிமாறப்பட்டது.

08.03.2022 அன்று, மல்டி ஸ்மார்ட் சொலுசன் மற்றும் ஆல் இந்தியா புக் ஒவ் ரெகோர்டஸ் இணைந்து நடத்திய பல்தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியில், "உலக சாதனையாளர்" என்னும் விருதினைப் பெற்றுக் கொண்ட, கழகத்தின் முன்னைத் தலைவர் அகணி சுரேஸ் அவர்களுக்கான பாராட்டு விழா கழகத்தினரால் 19.03.2022 அன்று நடத்தப்பட்டது.

ஆல் இந்தியா புக் ஒவ் ரெகோர்ட்சினரால் நடத்தப்பட்ட திருக்குறள் 133 அதிகாரத்தில், ஒரு அதிகாரம் ஒருவர் என்ற வகையில் எமது கழகத்தினர் எல்லோரும், மரபுக் கவிதைகள் படைத்துச் சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டனர்.

14.05.2022 அமரர் முஹம்மத் ஹன்சீர் அவர்களுக்கு இரங்கற் கூட்டம்.

29.05.2022 கனடா உதயன் நிறுவனத்தின் சிறப்பிதழ் வெளியீட்டில் கழகத்தினரும் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

25.08.2022 - தமிழ்ப் பட்டறை இலக்கிய பேரவையின் ஒருங்கிணைப்பாளர், கவிஞர் முல்லை நாச்சியாருடனான ஒன்றுகூடலில் அவரை வாழ்த்தியதுடன், இரவு உணவையும் ஒன்றாக உண்டு மகிழ்ந்தோம்.

மேலும், நாம் எமது உறுப்பினர்கள் சிலரது படைப்புக்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டு வைத்தோம். அவை பின்வருமாறு:

07.01.2021 - திரு. அருட்கவி ஞானகணேசன் அவர்களின் இசைத்தட்டு.

31.07.2022 - அகணி சுரேஸ் அவர்களது மூன்று நூல்கள்.

06.08.2022 - மாவிலி மைந்தன் திரு. சி சண்முகராசா அவர்களின் கவிதைத் தொகுப்பு.

இத்துடன்,

01.05.2022 - தமிழகக் கவிஞர் அ. தமிழரசி அவர்களின் இரு கவிதை நூல்கள்.

இவ்வாறாக, எமது கழகம் கடந்த இரு ஆண்டுகளிலும் பயனுள்ள பணிகள் பலவற்றை ஆற்றியுள்ளதுடன், மிகப் பெரும் வளர்ச்சியையும் கண்டுள்ளது. அதன் சிறப்பம்சங்களில் ஒன்றாக எமது வெளியீடான கவிச்சரமும் இடம் பெறுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான இதழின் வளர்ச்சிக்காக முழுமையாக உழைத்த, அதன் இதழாசிரியர் திரு. குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், உரிய நேரத்தில் தமது படைப்புக்களை ஒப்படைத்த கழக உறுப்பினர்கள், மாணவர்களுக்கும், எம்மைப் பலவகையிலும் ஊக்கப்படுத்தியதோடு, இதழ் வெளியீட்டிற்காகச் சகல விடயங்களையும் முன்னின்று நடத்திய எமது தலைவருக்கும், கழகத்தின் சார்பில் எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவ்வப்போது எமது நிகழ்ச்சிகளிற் கலந்து சிறப்பிப்பதோடு, தனது பத்திரிகை மூலம் எமது விழாக்கள் பற்றிய அறிவித்தல்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவும் உதவி வரும், உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும் மற்றும் எமது வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றிய ஈழத்தாய், எஸ்.ரி.எஸ். (sTs), தமிழாழி போன்ற ஒளிபரப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களுக்கும் கழகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எமது இதழை விரும்பிப் படித்துக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்து எம்மை உற்சாகப்படுத்தும் வாசக வட்டத்தினருக்கும் என்றும் எமது உளமார்ந்த நன்றி உரித்தாகட்டும்!

அன்புடன்,

பாவலர் பவானி தர்மகுலசிங்கம்

செயலாளர்
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்
டொரண்டோ, கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி நவிலல்....



"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது"

எனும் திருக்குறளுக்கு அமைய எமது "கவிச்சரம் - 2023" வெளிவருவதற்கு உதவிய அனைவரையும் நினைவிற் கொள்ள வேண்டிய தருணமிது.

வாழ்த்துரை வழங்கிய எமது மன்றத்தின் காப்பாளர் விருத்தக்கவி வித்தகர் கவிநாயகர் வி. கந்தவனம், பேராசிரியர் முனைவர் பாலசுந்தரம் இளையதம்பி, கழகத் தலைவர் பாவலர் கந்த ஸ்ரீபஞ்சநாதன், பாவலர் மாவிலி மைந்தன் சி சண்முகராஜா, கவிஞர் காசி ஆனந்தன், பாவலர் அகணி சுரேஷ், அணிந்துரை வழங்கிய ஆய்வாளர் பொன்னையா விவேகானந்தன், மதிப்புரை வழங்கிய கவிமாமணி முனைவர் குமரிச்செழியன், செயலாளர் பாவலர் பவானி தர்மகுலசிங்கம், இதழாசிரியர் குமரகுரு கணபதிப்பிள்ளை ஆகிய அனைவருக்கும் எமது மன்றத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- கட்டுரை வழங்கிய முனைவர் மைதிலி தயாநிதி,
- சிறுகதை வழங்கிய எழுத்தாளர் அ.முத்துலிங்கம்,
- சிறப்பான கவிதைகள் தந்த அனைத்துப் பாவலர்கள், கவிஞர்கள்,
- விளம்பரம் தந்துதவிய Seyon Financial Services ஸ்ரீ கண்ணுத்துரை, பேராசிரியர் வெ.அரங்கராசன்,
- இம்மலரை அழகுற தட்டச்சு செய்து வடிவமைத்துத்தந்த பா.சிவசங்கரன்,
- குறுகிய காலத்தில் அழகிய புத்தகமாக்கித் தந்த மல்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்மார்ட் சொல்யூசன் அச்சகம்,

- தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வில் கவிதை பாட இடம் தந்த "Tamil Canadian Centre for Civic Action" நிறுவனர் நீதன் சண் அவர்களுக்கும்,
- ஈழத்தாய், தமிழோழி, எஸ்.ரி.எஸ். (sTs) தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும், கீதவாணி வானொலி நிறுவனத்தாருக்கும்,
- மலர் வெளியீட்டுக்கு மண்டபத்தை வழங்கிய டொரண்டோ மாநகரசபை நிர்வாகத்திற்கும் கழகத்தின் சார்பாக எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாவலர் அருட்கவி தம்பிஐயா ஞானகணேசன்

மலர்க்குழு சார்பாக

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

டொரண்டோ, கனடா.

கவிச்சரம் நான்காவது இதழ் வெளியீட்டின் போது,

பின்வரும் கவிஞர்களுக்கு பாவலர் பட்டம் வழங்கி

கௌரவிக்கப்பட்டது.

விருது பெறுவோர் :

கவிஞர் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன்
கவிஞர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை
கவிஞர் மார்க்கம் சந்திரன் வேலாயுதபிள்ளை
கவிஞர் சுகந்தி மார்க்கண்டு
கவிஞர் சர்வாம்பிகை வாசுதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறுப்புத் தானம்

அறுசீர் விருத்தம்

மா மா மா மா
மா காய்

பாவலர் அகணி சுரேஸ்

உறுப்புத் தானம் செய்யப் பதிந்து
        உயிரைக் காப்போமே!
குறுகும் வாழ்வு மனிதர் ஆயுள்
        கூடச் செய்திடுமே!
நறுக்கும் நோயால் தவிக்கும் மாந்தர்
        நன்மை பெறுவாரே!
வறுத்த உடலாய்க் கருகும் முன்பு
        வங்கி சேர்ந்திடுமே!

வீழ்ந்த பின்பும் உதவும் வாய்ப்பை
        விருப்பாய் ஏற்போமே!
ஆழ்ந்து தூங்கும் உங்கள் உடலும்
        அருமை செய்திடுமே!
வாழ்ந்து முடித்த மரத்தின் இலைகள்
        மண்ணின் வளமல்லோ?
தாழ்மை உணர்வும் நீங்கிக் கொள்ளும்
        தரணி வாழ்த்திடுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் பெற்று வாழ்வோர் தொகையின்
        தகவல் பார்ப்பீரே!
ஊனம் உற்றுத் துடிக்கும் மனிதர்
        உணர்வை நினைப்பீரே!
வானம் செல்லும் உங்கள் ஆத்மா
        மகிழ்வாய்ச் சென்றிடுமே!
மானம் ஓங்கும் மனங்கள் வாழ்த்தும்
        வழங்கத் துணிவீரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரது சில தடங்கள்

பாவலர் இராஜ்மீரா இராசையா

பாண்டியர் சேரர் பலமிகு சோழரென
மாண்புடை வேந்தரானார் மாநிலத்தில் - காண்பவர்
பேருவகை கொண்டுமே பாடிடப் பாவகையுட்
சேருவகை வாழ்ந்தார் சிறப்பு.

குமரி சுமரி குளிர்நதிச் சிந்து
தமரெனக் காணத் தமிழர் - அமர்ந்தார்
அரண்மனை வீடு உயரடுக்கு மாடி
முரணில் அமைத்தார் மிடுக்கு.

இன்றும் வியப்பர் இவர்கள் திறன்களை
அன்றவர் கால்வாய் அமைத்தனர் - நன்றாகக்
கட்டடமும் கட்டினர் கற்களால் நீராடத்
திட்டத் தடாகமுந் தான்.

எழுத்தொடு சிற்பம் எருது பசுவாய்
அழுத்தமாய்த் தங்க அணிகள் - வழுவில்
கடற்சிப்பி வெட்டிக் கழுத்தணி காப்பு
திடமாகச் செய்திருந் தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டம் சதுரமாய் வீடமைப்பு அத்தொடு
திட்டப் பயிர்ச்செய்கை மைதானம் - தொட்டிகள்
சுட்ட களிமண்ணாற் சட்டிகள் பொம்மைகள்
நட்டார் தமிழ்ப்பெயரும் நன்று.

கொற்கையும் வஞ்சியும் காவிரியும் தொண்டையுமாய்ப்
பற்பல சொற்கள் பரவியுள - நற்பணி
ஆற்றித் தமிழ்கூறி ஆண்ட பெரும்பரப்பு
ஏற்றுமதி ஈங்கும் எடுப்பு.

சுமரி - சுமேரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அயலெலாம் மறையென ஆகிடுமே!

அறுசீர் விருத்தம்

பாவலர் விருத்தக்கவி வித்தகர் வே.இராஜலிங்கம்

மின்னலும் இடியென மேவிவரும்
வேளையும் கார்முகில் கூவிவரும்
இன்னலும் விடைபெற மழைவருமே
ஏகமும் நிலம்தொடும் எழில்வருமே
செந்நெலும் கலப்பையும் சுமந்தகரம்
சேர்ந்திட மருதமும் சென்றிடுமே
அன்பிலும் அடைக்கலம் ஆணஇல்லாள்
அகிலமும் அறமென மானமுற்றாள் !

கதிரெழும் வயலெலாம் காரிகைபோல்
கழுத்தெலாம் மண்ணினை வணக்கமிடும்
அதிசயம் நடந்திடும் அன்புஇல்லம்
அளிக்குமே இல்லறம் இன்பவெள்ளம்
விதிசெய நணைந்தவர் வேதனைகள்
விட்டிலாய் அழிந்திடும் வெற்றிவரும்
பதியொடும் குழந்தைகள் பங்குபெறும்
பாடசா லைவரும் பொங்கலிடும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிரொடும் கோவிலும் புகழ்பெறுமே

பூத்திடும் வளைக்கரம் அகில்வருமே

மதிதரும் கல்வியும் வான்பரப்பே

வளர்ந்திடும் வாழ்வியல் தேன்கரும்பே

சதிசெய எழுபவர் சரிந்திடவே

சரித்திரம் நிகழ்ந்திடும் தரணியிலே

மிதிலையின் சானகி மீண்டிடவே

விளங்கிட மனைவரும் மிதிலையதே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதர்கள் மண்தன்னில் மாறுவாரா?

பாவலர் கந்த. ஸ்ரீபஞ்சநாதன்

பகவானின் மூவினையால் பக்குவமாய் முதலாணும்
நிகரான முதற்பெண்ணும் நிலமுள்ள உலகினையும்
பகலவனும் கோள்களையும் படைத்திட்டு அவரவரின்
அகவினைக்கு ஏற்றவாறு அரனாரும் வாழ்வளித்தார்

தேகத்துள் ஆன்மாவைத் தகுந்தபடி உட்புகுத்தி
வேகமாக உயிரினையும் வித்தியாசம் இல்லாமல்
ஆகமவி திக்கேற்ப அகிலத்தை ஆளுகின்றார்
பாகத்தில் இடப்பாகம் பகிர்ந்தளித்த பகவானே

எல்லோரும் சமனென்ற இறைவனாரின் கோட்பாட்டை
நல்லோர்கள் ஒன்றுசேர்ந்து நாணயமாய்க் கைக்கொண்டு
தொல்லையின்றி வாழ்ந்துவந்தார் தமிழர்கள் வையகத்தில்.
வில்லங்கம் அங்கில்லை வித்தியாசம் என்றுமில்லை

உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் உதவாத கொள்கையில்லை
அயராத கடும்உழைப்பு அன்பொன்றே அடித்தளமாம்
பயமின்றி வாழ்ந்தார்கள் பண்புள்ள தமிழர்கள்
இயல்பாக ஒற்றுமையாய் இன்புற்று வாழ்ந்தனரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானுறையும் ஞாயிறினை வணங்கிவந்த தமிழர்கள்
ஆன்றோர்செக் கச்செவேலெ னச்சிவத்திட் டவொளியினை
சான்றோர்கள் சிவனாகச் சித்தரித்துக் கும்பிட்டார்
சான்றுண்டு சைவசமயம் சாதியில்லா உயர்சமயம்.

அன்றுவந்த அந்தணர்கள் ஆழமாகச் சிந்தித்து
நன்றாகச் சாதியினை நானிலத்தில் பிரித்துவிட்டார்.
அன்றுவிட்ட பிழையைநன்கு அறிவுகொண்டு சீர்தூக்கி
மனம்தன்னை மாற்றினாலே மகிழ்வாக வாழலாமே.


கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின்
'கவிச்சரம்' இதழ் வெளியீட்டு விழா!!
காலம் : 05-11-2023 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.30 மணி
இடம்: ஸ்காபரோ சிவிக் சென்ரர்
(Scarborough Civic Centre, 150 Borough Dr, Scarborough, ON M1P 4N7

தலைமையுரை
பாவலர் கந்த ஸ்ரீபஞ்சநாதன்
(தலைவர். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்)

வாழ்த்துரைகள்
செந்தமிழ்ப் பேரொளி, பேராசிரியர், முனைவர், பாலசுந்தரம் இளையதம்பி
(தமிழ்த்துறைத் தலைவர். அண்ணாமலை வளாகம், கனடா)
ஆர். என். லோகேந்திரலிங்கம்
(பிரதம ஆசிரியர் கனடா உதயன் வார இதழ்)
அகில் சாம்பசிவம்
(ஆசிரியர் இலக்கியவெளி இதழ்)

ஆய்வுரைகள்
எழுத்தாளர் கவிஞர் இரா. சம்பந்தன்
பாவலர் இராஜ்மீரா இராசையா

கவிச்சரம் வெளியீட்டுரை
பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை

"பாவலர்" விருதாளர்கள்
கவிஞர் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன்
கவிஞர் சந்திரன் வேலாயுதபிள்ளை
கவிஞர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை
கவிஞர் சர்வாம்பிகை வாசுதேவன்
கவிஞர் சுகுந்தி மார்க்கண்டு

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்த ஸ்ரீபஞ்சநாதன் — தலைவர்
க. குமரகுரு — பொருளாளர்
பவானி தர்மகுலசிங்கம் — செயலாளர்

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசு + ஈவு + அகம்

பாவலர் கனி விமலநாதன்

மூத்தவா் மூவா்தம் முத்தாம் கருத்துகளிற்
பூத்திருந்த பேரறிவுப் பூவொன்றைக் கண்டிடுவீா
வாழ்வில் வருசிக்கல் நீக்கிடு மவ்வுயிா
வாழ்நெறிதான் ஆசி வகம்.

மற்கலியா் பூரணா் மாண்புடை நற்கணியா்
உற்றறி வொன்றாய் இணைய உதித்ததை
நற்றமிழா் வாழ்விலன்று பொற்குவிய லானதெனக்
கற்றவா் கூறுகிறாா் காண்.

நியதி யும் தற்செயலும் நல்லணுவும் பாரிற்
பயனாம்முக் கோட்பாடாய் மற்கலியா் பாா்த்துப்
பொருத்தி யவற்றைப் புதையற் பொருளாய்ப்
பெருமையாய்த் தந்தாரே பாா்.

முப்பொருளும் தந்தவம் மூவருமே அந்நாளின்
ஒப்பிலா மாந்தராய் ஊரில் ஒளிா்ந்திட
ஐயம் அகற்றியவவ் "ஐ"வறிவாா் மக்களால்
ஐயனாா் என்றாகி னாா்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழ்வழி ஓடும் உயிரின் இயல்புணர்ந்து
வாழ்வினை நோக்கின் வராதாம் துயரேதும்
தேடவும் கிட்டிடாத் தெள்ளிய இவ்வுண்மை
பாடமாய் வந்த படிப்பு.

செந்தமிழர் வாழ்விற் செறிந்திருந்த ஆசிவகம்
தந்ததே இந்நாள் மதங்களின் தத்துவங்கள்
ஒப்பற் றொளிருமவ் வாழ்நெறியை எந்நாளும்
தப்பாது போற்றல் தகும்.

(ஐ - நுண்ணிய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடிய மண்கண்ட கருணையிலாக் கொலைகள்

(கொச்சகக் கலிப்பா)

பாவலர்
குமரகுரு கணபதிப்பிள்ளை

கனடாவின் ஆட்சியாளர் காத்துவந்த திருச்சபையும்
மனமுவந்து அமைத்திட்ட மாண்புமிகு வதிவிடத்து
இனஅழிப்புச் செய்திட்ட இழிவான கோலங்கள்
மனிதத்தைப் புதைத்தமையை மக்களுக்குப் பகிர்ந்தனவே

பூர்வீக குடிமக்கள் புத்திரரை அழைத்துவந்து
பாரெலாமும் பறைசாற்றிப் பராமரித்த சிறுவர்களை
தார்மீகம் போதிப்போர் சத்தமின்றிப் புதைத்திட்டார்
மாரடித்து அழவில்லை மக்களுக்காய் பணிசெய்வோர்.

மனிதநேயம் நிறைந்தெங்கள் மகத்தான தேசமப்பா
கனடாவின் புகழுக்குக் களங்கமதைத் தந்தசெய்தி
அனைவரையும் குலுக்கியதே ஆழ்துயரில் வியப்பில்லை
கனடாவின் பிரதமரும் கலங்கினார்காண் பெருந்தலைவர்

மனிதத்தை அழித்திட்ட மாக்களது செயல்தன்னை
இனவழிப்பு இதுவென்று எடுத்துரைத்தார் மனிதநேயர்
கனமான நம்தலைவர் கவலையுடன் பகர்ந்தாரே
தனிமனித உரிமைக்காய்த் தளராது குரல்கொடுத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையின் செயல்களுக்குத் தேவனிடம் வேண்டிநின்றே
அருட்சபையின் மதிப்புமிகு அருமையான போப்பவர்கள்
பெரும்சபையில் மன்னிப்பைப் பெருமிதமாய்க் கோரினரே
ஒருமனதாய் மக்களெலாம் உள்ளத்தால் மகிழ்ந்தாரே

இருநூறு வருடமதாய் இயங்கிநின்ற அமைப்பிதுவும்
இருப்பாக எண்ணிநின்ற இனமொன்றின் வேரதனைக்
கருவோடு அழித்திட்ட கருணையற்ற செயலதனைப்
பெருமிதமாய்ப் பகர்ந்தனரே பாரெலாமும் பறைசாற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காதல் செய்வீர்

கவிஞர்
கொக்குவில் சிங்கன்

தமிழ்க்குடி மட்டும் தோன்ற வில்லை
தமிழுடன் காதலும் தோன்றி விட்டது
தமிழரே காதலின் இலக்கணம் தந்தவர்
அமிழ்தா னகாதலை அன்பு என்போம்

உயிரில் கலந்து உணர்வில் எழுந்து
பயிராய் வளர்ந்து படர்ந்து செழித்து
உயிரோ ஒன்று உடலோ இரண்டும்
இயல்பாய்ச் சேர்ந்து கண்ணால் நோக்கி

சொல்லை என்றும் சொல்லா திருந்து
அல்லல் இல்லா அன்பு வளர்ந்து
அல்லும் பகலும் ஆசையைத் தூண்டி
எல்லை இல்லா இன்பம் பொங்கி

மனதோ தொடர்ந்து மந்திரம் ஓதும்
கனவு தோன்றும் காதலும் ஓங்கும்
நனவு உலகம் நந்தா விளக்காய்
தினமும் காதல் தென்றலாய் வீசுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய இல்லாள் இல்லறம் புகுந்தாள்
கனிவாய்ப் பேசிக் கருத்தினைக் கவர்ந்தாள்
பனியிலும் மெல்லியள் பண்பினில் உயர்ந்தவள்
இனிமைப் பெண்ணின் இலக்கணம் இவளே

போதனை செய்யீர் புதுமையைப் புகுத்துவீர்
வேதனை நீங்கக் காதல் செய்வீர்.
காதல் செய்வீர் கருத்தொன் றாவீர்
காதல் ஒன்றினால் குவலயம் வாழுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடு கட்டும் நினைவுகள்!

அறுசீர் விருத்தம்

(வாய்பாடு: மா, மா, காய் -
மா, மா, காய்)

பாவலர் மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

தூக்க மற்ற இரவெல்லாம்
        தூசு தட்டித் துடைத்தபடி
நீக்க மில்லா இமைக்குள்ளே
        நீண்டு தொடரும் நினைவுகளால்
பூக்கள் பூக்கும் ஒருவேளை
        புகைந்து எரியும் மறுவேளை
ஏக்கம் இன்பம் இரண்டோடும்
        எட்டிப் போகும் உறக்கமுமே!

பள்ளித் தோழர் நினைவுகளும்
        படித்த காலக் காட்சிகளும்
கள்ள மில்லா நெஞ்சினிலே
        காய்த்த காதற் கனவுகளும்
துள்ளித் திரிந்த நாட்களிலே
        தொலைத்து விட்ட பொழுதுமென
அள்ளி வீசும் நினைவலைகள்
        அடித்து விரட்டும் அமைதியையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றே இழந்த பெருமைகளும்
பிரிந்தே போன உறவுகளும்
வற்றி வரண்ட குளமாக
வறுமை கண்ட இளவயதும்
உற்ற அறிவொன் றில்லாமல்
ஒளித்தே செய்த தவறுகளின்
குற்ற உணர்வும் கூடியங்கே
கூடு கட்டும் நினைவுகளே!

வெள்ளம் போலே மிகுந்துவரும்
வேண்டா நினைவுக ளகலாதா?
உள்ளம் மீட்டும் நினைவெல்லாம்
ஒருங்கே அழிந்தே மறையாதா?
கள்ள மற்ற பிள்ளைமனம்
கனிவாய் மீண்டும் வாராதா?
தள்ளிப் போகும் நித்திரையும்
தழுவி என்னைச் சேராதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவேனில்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

கவிஞர் சுகந்தி மார்க்கண்டு

பட்டுடை அணிந்த பருவப் பெண்ணாய்
எட்டுத் திக்கும் ஈடிலா அழகுடன்
எண்ணிறை மலர்கள் எத்தனை எத்தனை
கண்ணிறை காட்சிகள் களிப்பைத் தருமே
உயிரைப் புதைத்து உறைந்த மரங்கள்
துயிலின் நீங்கி துளிர்கள் விடவே
மஞ்சளாய் சிவப்பாய் மணங்கவர் பச்சையாய்
நெஞ்சம் நிறைக்க நிழல்தரும் காட்சி
இயற்கை அன்னையின் எண்ணிலா அதிசயம்
வியப்புறு வண்ணம் விரிவதும் கண்டோம்
வலசையால் மீண்டு வந்த பறவைகள்
குலவிடும் உறவுகள் குதூகலம் கொள்ளும்
உறைந்து கிடந்த ஓடையும் ஏரியும்
நிறைந்து வழியும் நீர்நிறைந் திடவே
பள்ளிச் சிறாரும் பாடி ஆடி
உள்ளம் மகிழ்ந்து ஊரெலாம் திரிவர்
ஒன்று கூடல் ஓய்விடம் தேடி
இன்பமாய் நாட்களை எண்ணுவர் சிலரும்
விரிகதிர்ச் செல்வன் வீசிடும் அனலில்
எரிக்கும் கோடை எங்கும் புழுக்கம்
தேனிலும் இனிதாய் தித்திப்பு தந்த
வேனிற் காலமும் விரைந்து கழிந்ததே ! !

வலசை : பருவக்காலங்களிற்கு ஏற்ப இடம்பெயர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதோர் உலகம் செய்வோம்

கவிஞர்
மரு.செல்வி முருகேசன்

அடிமை இந்தியாவில் அடிக்கடி கேட்டது
விடுதலை இந்தியாவில் விடாமல் ஒலித்தது
அந்நாளில் பாடப் புத்தகத்தில் படித்தது
இன்னாளில் கவிதைக்குத் தலைப்பாய் இருப்பது

தானென்றும் தனக்கென்றும் தன்னலமே சரியென்றும்
பணமும் பொருளும் பகட்டுமே பெரிதென்றும்
பழமை பழுதென்றும் புதுமையே புதிதாக்கும்
நாகரிக உலகையே புதியதோர் உலகம் என்பார்

வானத்தில் கோட்டை கட்டுவது போலிருக்கும்
நூறாண்டு திட்டம் தீட்டுவது போலிருக்கும் (ஆனால்)
வேதனைகள் சோதனைகள் தொடர்கதைகள் என்செய்ய?
எந்திர வாழ்வு மந்திரமாய் மறையட்டும்

பசியோடு பட்டினி பழங்கதை ஆகட்டும்
பகிர்ந்து உண்ணுதல் புதுவுலகில் தொடரட்டும்
உழைப்பவன் உயர்வது நல்லுலகில் நடக்கட்டும்
செயற்கை குறைந்து இயற்கை இணையட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசுக்குக் கல்வி நேற்றோடு போகட்டும்
குறைவிலா கல்வி பொதுவென்று ஆகட்டும்
கற்கின்ற கல்வி கசடற இருக்கட்டும்
கற்றவர் அறத்தோடு கருணையைப் பரப்பட்டும்

நல்லது கெட்டது தரம்பிரிக்கத் தெரியட்டும்
விஞ்ஞானம் மெய்ஞானம் சமமாக விரியட்டும்
போதுமிந்த வாழ்வெனும் சலிப்புத் தொலையட்டும்
புதியதோர் உலகம் செய்திடுவோம் வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தாண்டு பிறக்கட்டும் புத்துணர்வு மலரட்டும்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

கவிஞர் சோக்கெல்லோ சண்முகம்

புத்தாண்டு பிறக்கட்டும் புத்துணர்வு மலரட்டும்
சொத்தான எம்தமிழ் சோதியாக வளரட்டும்
முத்தான விளைநிலங்கள் முப்போகம் விளையட்டும்
கொத்தாக நெல்மணிகள் கொழித்தே செழிக்கட்டும்
எத்திசையும் எம்மதமும் எல்லோரும் ஒன்றென்றே
தத்துவ மேதைகள் தரணிக்கு நன்றென்றே
எத்தனை விதமாக எடுத்துரைத்தார் பொய்யன்றே
மத்து அறிந்திடாது மோர்ச்சுவை மெய்யன்றே
கூத்தும் பாட்டும் கொடிகட்டிப் பறக்கட்டும்
மூத்தோர் அறிவுரைகள் முடிந்தமட்டும் ஏறட்டும்
புத்தம் புதுக்கலை பொங்கியே வழியட்டும்
புத்துலகு காண்பதற்கு புவியோர்கள் செல்லட்டும்
அத்தனை உயிர்களும் அன்புடனே வாழட்டும்
செத்தபின் காட்டும் சிவலோகம் ஒழியட்டும்
முத்தான கலைகளெல்லாம் மானிடர்க்காய் ஆகட்டும்
வெத்துவேட்டு வீணரின் வெறித்தனம் அடங்கட்டும்
அன்புநெறி தளைக்கட்டும் அகிலம் மகிழட்டும்
துன்பங்கள் தொலையட்டும் தூயவர்கள் வெல்லட்டும்
நிலமுண்டு வளமுண்டு நீருண்டு கடலுண்டு
மலையுண்டு ஆறுண்டு மனிதவளம் உண்டு
கனிமங்கள் பலவுண்டு காட்டு வளமுண்டு
கனிதரு மரங்களோடு கருங்காலியும் உண்டு
பொங்கிவரும் புதுவாண்டே வருக வருக
பொங்கலிட பொன்மகளே வருக வருகவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாசான் மீது கொண்ட நன்மதிப்பு

நேரிசை வெண்பா

கவிஞர் களப்பூரான் தங்கா

நல்லதாம் வெண்பாவை நாவிசைக்க வைத்திடுமே
எல்லாம் தரவல்ல என்முதலே! - சொல்லான்
அலக்சாண்டர் மீதுகொண்ட அன்பின் மதிப்பை
பலமாக்கப் பாடுகின்றேன் பா.

கந்தவனச் செம்மல் கனிவாய்க் கவிபாடும்
அந்தவனச் சோலையிலே ஆங்கமர்ந்தே - வந்தனமாய்
உந்தனுடன் சேர்ந்தவரும் ஒன்றாய்க் கவிபாட
எந்தனுடன் சேரும் எழுத்து.

என்கவிதை கேட்க இனிப்பாய் இருப்பதற்கு
தன்கவிதை போலாக்கும் தாராளர் - மென்மேலும்
எங்கள் கவிப்புலமை எங்கும் ஒலித்திடவே
பொங்கும் தமிழ்சேர்த்தே பூத்து.

எழுத்தசையில் சீர்தளைத்து ஏற்பாய் அடிகள்
பழுக்கத் தொடையமைத்துப் பாட - வழுவா
வணப்பாய் இசைசேர் வடிவமைத்துக் கற்க
எனக்குள்ளே தோன்றும் இயல்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர்நாம் செய்த முழுவினையின் நற்பயனே!
பின்னர்நாம் கண்ட புலவுகளே - உன்னதமாய்
எம்மறிவில் என்றும் எளிமையுடன் பாட்டமைக்க
உம்மறிவில் ஊறிடுவோம் ஓர்ந்து.

இத்தனைக்கும் நாங்கள் எதுவரைக்கும் கற்றோமோ!
அத்தனையும் வித்தகர்கள் அன்பளிப்பே! - சித்தமுடன்
வித்தான வெண்பாவை வீச்சாகக் கற்றிடுவோம்
கொத்தாக வெண்டளையே கோர்த்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழவைத்த நாட்டை வாயாரப் பாடிடுவோம்

பாவலர் அருட்கவி
தம்பிஐயா ஞானகணேசன்

நாடுகள் பற்பலவும் நாடிநான் பார்த்ததிலே
நாடு கனடாபோல் நான்காணேன் - தேடுதற்கு
நன்நாடாம் நம்கனடா நாட்டினை நாள்தோறும்
நன்குநீ பாடு நயந்து!

பல்லின மக்களைப் பாரிலே ஒன்றாக்கி
நல்லின மாக்கிய நாடிதுவே - அல்லலின்றி
தத்தம் மதம்மொழியைத் தாமே தொடர்ந்திடவே
சித்தம் கனடாவின் சீர்!

ஆலயமும் பள்ளிகளும் ஆகமக் கோயில்களும்
சாலச் சிறந்த சன்மார்க்கர் - ஏலவரும்
ஒன்றாய் இணைந்தொரு பேதமு மின்றியே
நன்றாக வாழ்ந்துவரும் நாடு!

சொந்தமண் காணாச் சுதந்திரப் பாணியிலே
இந்தமண் காணுதே ஏடுபல - சிந்தைமகிழ்
சித்திரமும் வாய்ப்பாடும் சீருறு நாட்டியமும்
எத்திசையும் ஓங்குதுபார்! ஏத்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுக ளோிக எற்புத நீர்வீழ்ச்சி
கூறுதற் கரியநற் குன்றுகளும் - நாறுமலர்ப்
பூங்காவும் தோட்டமும் போர்ந்த அழகுறு
பாங்கான நாட்டினைப் பாடு!

வாழிநம் மக்களொடு! வாழி கனடாமண்!
வாழிய பல்லினமும் வாழ்வாங்கே - வாழியரே
ஓர்குடையுள் ஓர்இனமாய் ஓர்மதமாய் ஓர்குணமாய்
பார்போற்றும் எம்நாட்டைப் பாடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தோர் நாட்டின் முதுகெலும்பு

கவிஞர்
நாகேஸ்வரி சிவகுருநாதன்

மூத்தோர் நாட்டின் முதுகெலும் பன்றோ!
மூதறிஞர் செப்பிய முதிர்ந்த வாக்கு.
போதனை செய்தாரைப் போற்றும் உலகு.
ஆதலால் அவரை ஆதரித் தணைப்போம்!

மண்ணில் பலபேர் முளைத்து விட்டனர்.
கண்ணில் பெரியோரைக் கண்டால் போதுமே.
வண்ணச் சொல்லினால் வார்த்தை ஜாலத்தால்
விண்ணைத் தொட்டிடும் வேதனைச் சொல்வீச்சு.

காவோ லைவிழக் குருத்தோலை சிரிக்குமாம்.
நாவால் சொன்னால் நாணார் இளையோர்.
தாமாய் உணர்ந்தால் தெரியும் வாழ்வினில்
தாமும் ஒருநாள் தரணியில் முதியோராய்

வருவோம் என்று வாழ்க்கையை நினைத்தால்
அருமைப் பிறவியை ஆண்டவன் அளித்தது
எருமைபோல் அன்றி இயன்ற உதவியைப்
பெருமையாய்ச் செய்து பேரும் பெறவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் தமிழர் உயர்ந்த எண்ணத்தில்
உவகை யுடனே ஊக்கமாய் ஏழைக்கு
மலர்ந்த முகத்துடன் மனமாய்ச் செய்தால்
கலங்கா வாழ்வினைக் கடவுளும் அளிப்பாரே!

முதியோர் என்போர் முதிர்ந்த அறிவுடையோர்.
நதியின் .இயல்புடன் நிலத்தினில் திகழ்வோர்.
மதி யுள் ளவர்கள் மதித்து நடந்தால்
எதிலும் இன்பமாய் ஏற்றமுற வாழ்வாரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பைத் தேடும் இதயங்கள்

கவிஞர் ப.சயந்தன்

தேன்மலரும் இதழ்தேடித் தாவிவரும் உறவு இது
வான்மலரும் வேளையிலே தோன்றும் வெண்ணிலவாய்
பாமலரும் சோலையிலே மொட்டவிழும் மலரெடுத்து
தூவும் ஒரு தென்றலிது அன்பைத்தேடும் இதயத்தில்
தாவிவரும் தவிப்பு இது. கவிதையாய் பொலிகிறது

இயற்கையை உறவாய்க்கொண்டு
உழன்றிடும் உயிர்கட்கெல்லாம்
வியத்தகு வார்த்தை சொன்ன
வள்ளுவன் அறத்தையும்
வாழ்வினில் மறக்கலாமோ?

அகரத்தை நுகரும் போதே அறத்தை உணரவைத்து
சிகரத்தில் சிந்தையினை ஏற்றுமே தமிழ்மரபு
மரபுகளின் மலர்வுகளே மண்ணுலகில் மிளிருகின்ற
மறையாத சூத்திரங்கள்
ஊர்அறியோம் பேர்அறியோம் யார்பெற்றார் தான்அறியோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்கொண்ட விடுதலைக்காய் வேரெனவே ஆகிநின்றோர்
சீா் அறிந்தோம் திறமறிந்தோம் தியாகத்தின் சிறப்பறிந்தோம்

துயிலும் இல்லத்தொட்டிலிலே தூங்கும் தியாகிகளை
தாயகத்து மண்அறி யும் தம்முயிரைத் தந்தவரைத்
தினம்தேடும் உள்ளங்கள்தான் அறி யும்

ஒன்றான மலர்ச்செடியாய் வாழ்ந்திருந்த தேசம்விட்டு
பிய்த்துஎறியப்பட்டு சிதறிநாம்போனாலும்
அன்பைத்தேடும் இதயமாகி
ஆற்றாமல் அழுவதன்றி வேறென்னநான்செய்ய?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிர்கின்ற இலைகண்டு உழல்வதில்லை விருட்சங்கள்!

(கொச்சகக் கலிப்பா)

பாவலர் பவானி தர்மகுலசிங்கம்

நோயுற்றுக் காயம்தான் நொய்ந்துருகி நுடங்கிடினும்,
வாயுரைக்க நாவரண்டு வார்த்தைகள்தான் புரண்டிடினும்,
ஓயும்நாள் உணையணுகி உறக்கநிலை நெருங்கிடினும்,
தாயுள்ளம் கொண்டிருப்பின் தளிர்த்திடுவாய் தரணியிலே!

நம்பிக்கைத் துடுப்பெடுத்து நல்வாழ்வுப் படகோட்டி,
அம்புலியின் வளர்ச்சிதனை, ஆதவனை அகத்திருத்தி,
எம்புவியில் நீயடைந்த எழுச்சிமிகு வாழ்வெண்ணி,
வெம்பியழும் நிலைமறந்து வியனுலகம் கண்டிடுவாய்!

நதிவெள்ளம் கடல்சேர, நலிவதில்லை மாநதிகள்!
உதிர்கின்ற இலைகண்டு உழல்வதில்லை விருட்சங்கள்!
சிதிலமாதல் கண்டுகண்ணீர் சிந்துவதில் லைசிற்பம்!
விதியென்பார்! வினையென்பார்! வீணுரைப்பார்! விலக்கிடுவாய்!

இளமையான மேனியென்றும் இகத்தினிலே நிலைப்பதில்லை
அளவார்ந்த செல்வமுமோ அழிந்துவிடும் மின்னலென
வளமான நிலமென்னும் மனத்தினிலே நல்லெண்ணம்
உளமார்ந்து விதைத்திட்டால் உண்டாகும் கனிவளங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவனின் ஒளிக்கீற்றால் ஆர்கலியும் வளம்குன்றிப்
பேதமின்றி மழைநீராய்ப் பெய்கிறதே மாநிலத்தில்!
வேதனைதாம் கொள்வதில்லை, விஞ்சிடும்தன் வரட்சிகண்டு,
பூதலத்தாள் உவகைகண்டு பூத்திருப்பாள் சமுத்திரத்தாள்!

வாழ்க்கையெனும் தேரதனை வண்ணமுற வடம்பிடித்து
ஆழ்ந்தவுயர் அறிவுகொண்டு அடக்கத்தைக் கடைப்பிடித்தால்,
தாழ்ச்சியென்றும் நெருங்கிடாது, தாளாண்மை கொண்டுநீயும்
சூழ்கின்ற துயர்போக்கத் துணிவுடனே செயற்படுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு ஜூலை

அறுசீர் விருத்தம்

கவிஞர் க.மதிபாஸ்கரன்

எண்பத்தி மூன்று ஆடி
இருபத்தி மூன்று தேதி
தென்திசையின் ஈனர் கூடித்
தெருப்பேயைப் போல ஆடிப்
பண்பான தமிழர் நாடிப்
பல்வதைகள் செய்து வாட்டிக்
கண்ணெதிரே உறவை வெட்டிக்
களித்தநாள் கறுப்பு ஆடி

புத்திரரது புதல்வப் பேடி
புணர்ந்துகூடக் காவல் கேடி
சொத்துக்கள் சூறை யாடிச்
சுவைக்கவிளம் பெண்கள் வாடிச்
செத்திடப்பல் நூறு சோடி
சிதைத்திடஆ யிரங்கள் மாடி
வர்த்தகர்கள் விட்டு ஓடி
வைத்துத்தீ அழித்தார் கோடி.

துணிவில்லை கேட்கத் தட்டித்
துயருற்ற தமிழர் பற்றி
பணிவுற்றோர் பெற்றார் வெற்றி
பகைத்தோரைக் கொன்றார் வெட்டி
மனிதத்தின் நேயம் ஓடி
மறைந்திட்ட நாட்கள் கோடி
புனிதப்போர் செய்தோர் ஆடிப்
புதைந்தாரே சூதால் வாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குலதெய்வம்

(இன்னிசை வெண்பா)

கவிஞர் மார்க்கம் சந்திரன்

வேழ முகனை வருந்தித் துதித்திடப்
பேழை வயிற்றோன் பெருநிதி தந்தே
கணங்கள் நெருங்கிடாக் காத்திடும் காவல்
கணபதி என்கவிக்குக் காப்பு.

வருத்தலைவி ளான்பதி வான்புகழ் பூமி
மருத மரத்தின் மடியிலே தான்தோன்றி
முத்திரை காட்டும் விநாயகத் தேவனை
நித்தமும் சேவித்தல் நன்று.

முருகனின் அண்ணனே மோதகப் பித்தா
கரும்புடன் தேனையும் காரெள் கலந்துமே
காலம் தவறிடாக் காணிக்கை தந்தனை
கோலம் குறைவறக் காத்து.

குளக்கரை மாமருதில் கோலமாய் நின்று
விளக்குகள் ஏற்றி வணங்குவோர் விக்கினம்
போக்கும் துதிக்கைப் பகவனை வேண்டினால்
நீக்குவான் மாறிடா நோய்.

பார்வதி மைந்தனே பானை வயிற்றனே
சோர்வுடன் வந்தவர் சோகம் அறிந்தே
பரிவுடன் பாசமாய்ப் பாதுகாத் திட்ட
கரிமுகக் காட்சியைக் காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாயத்தை என்சொல்வேன் கேள்

(நேரிசை வெண்பா)

கவிஞர்
முரளீதரன் நவரட்ணம்

வாழ்க்கை

வாழ்க்கை நமக்கு வரமா நிரந்தரமா
ஊழ்வினையால் வந்ததோர் சாபமா - ஆழ்மனதில்
கேள்விகளால் வேள்வியொன்று செய்திட நல்விடை
நாளும் கிடைக்கும் நமக்கு.

மழை

மின்னல் ஒளிரும் மழைமேகங் கூடவே
இன்னிசை யாகும் இடியொலி - மன்னுயிர்
போற்றும் கரவொலி பாரில் மழையாக
தோற்றும் அரங்கோ உலகு.

வேறு

புள்ளினம் பாடும் பறக்கும் இனிதான
நல்லிளம் காலைப் பொழுதில் - உளமுருகி
காயம் கருகியான் காட்சியில் நின்றநல்
மாயத்தை என்சொல்வேன் கேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மை

பாவலர்
புலவர் முருகேசு
மயில்வாகனன்

காமம் பொருளோ டிணைந்தாலே துன்பந்தான்
ஈமம் வரையும் இணைந்திடுமே - தீமைகள்
கண்டஞ்சாத் தீரவொன்று கண்டாலே தீங்கேது
கண்மணி யாள்துணை தேடு.

வாய்மை எனப்படுவது யாதொன்றும் தீமையிலா
தூய்மையாம் சொல்லைத் துணைகொண்டு - வாய்திறந்தே
அன்பாய் மொழிபேசி ஆதரவு காட்டியே
துன்பகற்றும் நல்வார்த்தை சொல்.

தன்னெஞ் சறியவே சொல்லற்க பொய்தனை
இன்னல் தவிர்க்கவே என்றுமே - அன்பான
வாழ்வுக் குணர்த்தவல்ல வாய்மைகளைப் பேசினாலே
தாழ்வேது மக்களுக்குத் தான்.

மனத்தொடு உண்மையை மாசின்றிப் பேசின்
தனமொடு தானியம் மற்று - மனையாளும்
வாய்ப்பாய் அமைந்திட்டால் வாழ்வு சிறக்குமே
தூய்மையாம் வாழ்வென்றும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மையே பேசி வளமாக வாழ்வோரின்
தூய்மையாம் வாழ்வில் துயரேது - தாய்மையே
இல்லாத தங்கையர் இல்லத்தில் இன்பமுண்டோ
இல்லார்க் குதவுதலே இன்பு.

பொய்மையும் வேண்டும் புரைதீர்க்கும் நன்மையெனில்
தெய்வப் புலவர் திருமொழி - உய்யவழி
காட்டியதால் உண்மை தெரிந்துகொள்ளக் கற்றதனால்
தீட்டினேன் இக்கருத்தை ஈங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பாவிலோர் வீரக் காதல்

கவிஞர் மேரி ஞானபிரகாசம்

மலைச்சாரல் ஓரம் மதிமயங்கும் வேளை
அலைபாயும் என்னகத்துள் ஆழமான துள்ளலினால்
ஓதல்பிரிவில் மூவருடம் ஓதிப்பின் வீடுவந்தேன்
காதல்கண் பார்வை கனிந்து.

நானொரு போர்வீரன் நாட்டுக்கா வல்காரன்
நானொரு பற்றற்ற நற்கடமை வீரனாவேன்
நாட்டைநே சித்திடும் நல்லோர்க்கு என்நாளும்
நாட்குறியா நல்மரணம் நன்று.

பாசி படர்ந்து பரவுதல்போல் என்மேலில்
தேசியக்கொ டிப்போர்வை தேகத்தை மூடிட
ஆறடி என்னுடமை ஆதலின்என் ஆருயிரே
ஆறாது என்மனமும் அங்கு.

இன்னும்சின் போழ்தேநீ என்இதயத் தில்இருப்பாய்
மின்னும் ஒளிவெடிக்குள் மன்னுயிரில் ஒன்றானாய்
என்னுயிரும் போனால்நீ என்றும்கைம் பெண்ணில்லை
என்னுள்ளே என்றும் இருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலோடு நாடுகாக்கும் காலச்சிந் திப்பிழந்தேன்
காதலாம் காமம் களவுகற்பு நற்சுவையே!
நான்தமிழன் நம்மவர்க்கோர் நாடுகேட்டுப் போராடி
நானிறந்தால் பூக்குமா நாடு?

இறுதிப் பயணம் இராணுவ வீரர்
இறுதி உரையோடு இன்பொலியும் கேட்க
மரியாதை செய்வார் மனிதநேயம் உள்ளோர்
அரியவாய்ப்பு அன்றோ எனக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத் திறனாய்வு

முனைவர் மைதிலி தயாநிதி
(மேநாள் உதவி அரசாங்க அதிபர், இலங்கை)
கனடா.

இலக்கியப் பிரதியை எவ்வாறு வாசகர் வாசித்து விளங்கி அர்த்தப்படுத்தி மதிப்பிடுகின்றனர் என்பது பற்றியதே இலக்கியத் திறனாய்வு. வாசகரின் அச்செயற்பாட்டிற்கு ஆதாரமாக இருப்பவை மேலைத்தேயத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட இலக்கியக் கோட்பாடுகளாகும். இலக்கியத் திறனாய்வு என்பதற்கும் இலக்கிய இரசனை என்பதற்கும் இடையில் வேறுபாடு உண்டு. இரசனை என்பது இலக்கியத்திலும் கலைகளிலும் சமூகமயமாக்கலால் (socialization) உண்டாகும் ஈடுபாட்டினால் அவற்றில் திளைக்கும்போது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளைக் குறிப்பது. சுவைஞரின் மனதில் உண்டான உணர்ச்சிகளின் தாக்கமானது வியர்வை அரும்புதல் உடல் நடுக்கமுறல் கண்ணீர் சிந்தல் மயிர்க்கூச் செறிதல் முகம் சிவத்தல் முதலான மெய்ப்பாடுகளினால் வெளிப்படுத்தப்படும். இந்த மெய்ப்பாடுகளின் அடிப்படையிலேயே இறையனார் அகப்பொருள் எனும் நூலுக்கு நக்கீரரின் உரையே மிகச் சிறந்தது எனத் தீர்மானிக்கப்பட்டது. நக்கீரர் உரை கேட்ட உருத்திரசன்மன் எனும் மூங்கைப் பிள்ளை அவ்வுரையின் சிறப்பில் ஆழ்ந்து "பதந்தொறும் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான்" என்று அந்நூல் கூறும்.

பொதுவாக இலக்கிய இரசனை என்பது மனக்கிளர்ச்சி தருகின்ற அல்லது உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புகின்ற வாசிப்பு அனுபவமாக மட்டும் அமைந்து விடுகின்றது. இலக்கிய இரசனைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கைலாசபதி விளக்கும் உணர்ச்சிக்கொள்கை இலக்கிய நூல் எவ்வாறு படைப்பாளியின் கற்பனையாற்றல் ஆளுமை முதலானவற்றை வெளிப்படுத்துகின்றது என்பதை நோக்கும் வெளிப்பாட்டுக் கொள்கை என்பவற்றுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. இத்தகைய இலக்கிய இரசனை அடிப்படையில் கவிதையொன்று பற்றி எழுதுதல் வாசகனின் உணர்ச்சி அனுபவத்தை மட்டுமே கொண்டிருத்தலால் அது அகவயமான எழுத்தாகின்றது. மாறாக இலக்கியத் திறனாய்வு என்பது இலக்கியம் குறித்த அறிவுரீதியிலான புறநிலைப்பட்ட முயற்சியாக விளங்குகின்றது.

ஆங்கிலத்தில் Literary criticism என்றழைக்கப்படும் இலக்கியத் திறனாய்வு என்பது தமிழிற்குப் புதிய துறை என்ற கூற்று விவாதத்திற்குரியதொன்றாகவே பார்க்கப்படுகின்றது. இலக்கண ஆசிரியர்களின் திறனாய்வுக் குறிப்புகள் இலக்கியப் படைப்பாளிகளின் திறனாய்வுக் குறிப்புகள் உரையாசிரியர்களின் திறனாய்வு திருவள்ளுவமாலையும் திறனாய்வும் எனும் தலைப்புகளில் பண்டு தொட்டுத் தமிழில் திறனாய்வு பலவழிகளில் நிகழ்ந்து வந்துள்ளது என்பதைப் பஞ்சாங்கம் எடுத்துக்காட்டுகின்றார். ஆனால் இலக்கியத்திறனாய்வு என்பதைத் தமிழிற்குப் புதுவரவு என்று கொண்டோமேயானால் இதுவரை அறிந்திராத வழிகளில் தமிழிலக்கிய நூல்களைப் பார்ப்பதற்கு இத்துறை துணைசெய்கின்றது எனக் கூறலாம். இலக்கியத் திறனாய்வு என்பது ஒப்பீடு பகுத்தாராய்தல் விளக்கமளித்தல் மதிப்பீடு எனும் செயன்முறைகளில் அமைந்திருக்கும். அத்துடன் அச்செயன்முறைகள் critical theories என்றழைக்கப்படும் இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படைகளில் மேற்கொள்ளப்படும். இலக்கியத் திறனாய்விற்கு அடிப்படையான கருத்தாக்கங்கள் (concepts) அறிவுசார் அனுமானங்கள் (presumptions) என்பன இலக்கியக் கோட்பாடுகளிலிருந்தே பெறப்படுகின்றன. இலக்கியக்கோட்பாடுகள் என்று சொல்லப்படுவை எல்லாம் இருபதாம் நூற்றாண்டில் ஒரே காலத்தில் தோன்றியவை அல்ல. எடுத்துக்காட்டாக புதுமைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு (New Criticism) எனும் இலக்கியக்கொள்கை 1940 களில் தோன்றியது எனில் சிதைவாக்கம் (deconstruction) 1970 களில் உருவானது.

இலக்கியத் திறனாய்வு என்பது புதுமைத் திறனாய்வு மாக்சியத் திறனாய்வு பெண்ணியத்திறனாய்வு அமைப்புவாதத் திறனாய்வு வாசிப்போன் அனுபவத் திறனாய்வு எனப் பல்வகைப்படும். திறனாய்வு வகைகள் அனைத்தையும் இங்கு குறிப்பிடுதல் சாத்தியமில்லை. ஒவ்வொரு திறனாய்வும் தனக்கு ஆதாரமாகச் சில கொள்கைகளைக் கொண்டிருக்கின்றது. அதன் அடிப்படையில் முக்கியமான சில வினாக்களை எழுப்புகின்றது. எடுத்துக்காட்டாக புதுமைத் திறனாய்வு இலக்கிய ஆக்கத்தின் மையக்கருத்தானது உலகளாவிய பொதுமைப்பண்புடையதாக இருக்க வேண்டும் என்றும் ஆக்கமொன்றின் உள்ளார்ந்த ஒழுங்குப் பண்பினைத் (organic unity) தெரிந்துரைத்தலே திறனாய்வின் நோக்கம் என்றும் கருதுகிறது. எனவே, ஓர் ஆக்கத்தின் வடிவம் சார்ந்த ஒவ்வொரு இலக்கியக்கூறும் குறிப்பிட்ட மையக்கருத்தினை உணர்த்துதற்கு எவ்வாறு பங்களிக்கின்றது என்பதையே புதுமைத் திறனாய்வு அடிப்படைக் கேள்வியாகக் கொள்கிறது. அத்துடன், ஒவ்வொரு திறனாய்வும் முக்கியமான கருத்தாக்கமொன்றினை மையமாகக் கொண்டு அமைகிறது. எடுத்துக்காட்டாக பெண்ணியத் திறனாய்வில் ஆணாதிக்கமும் (patriarchy), மாக்சியத் திறனாய்வில் வர்க்கவேறுபாடும் முக்கியமான கருத்தாக்கங்களாகும்.

மேலைத்தேயத் திறனாய்வு முறைகளை சங்கப் பாடல்கள் முதலான தமிழ்ப் படைப்புகளுக்குப் பிரயோகித்துக் கட்டுரை எழுதியவர்களுள் முக்கியமானவர் ப. மருதநாயகம். அவரின் மேலைநோக்கில் தமிழ்க் கவிதை எனும் நூல் திறனாய்வுக் கோட்பாடுகளில் ஆர்வமுள்ளவர்களினால் வாசிக்கப்பட வேண்டிய நூல்களில் ஒன்று. புதிய திறனாய்வு முறைகளைப் பயன்படுத்துவதால் நூல்கள் பற்றிய புதிய விளக்கங்கள் உண்டாகின்றன. ஒரு நூலையே வெவ்வேறு திறனாய்வுக் கண்கள் கொண்டு பார்க்க முடியும். Louis Tyson தனது நூலில் The Great Gatsby

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1925) எனும் நாவலைத் திறனாய்வு செய்வதற்குப் பல்வேறு திறனாய்வுக் கொள்கைகளைப் பயன்படுத்தியுள்ளார். நூலைப் பற்றிய இத்தகைய அறிவுபூர்வமான புரிதல்கள் இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் துணை செய்வன ஆதலால் இத்தகைய திறனாய்வுகள் தமிழில் வளர்த்தெடுக்கப்பட வேண்டியன.

உசாத்துணை நூல்கள்

கைலாசபதி,க. இலக்கியமும் திறனாய்வும் (யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1972).

பஞ்சாங்கம். க. தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு: சில அறிமுகக் குறிப்புகள் (புதுவை: செல்வன் பதிப்பகம்,1990).

மருதநாயகம். ப. மேலைநோக்கில் தமிழ்க்கவிதை (சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2001).

Tyson, Louis. Critical Theory Today (New York: Routledge, 2006).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் தோற்றுப்போன குதிரை வீரன்

அ. முத்துலிங்கம்

அடுத்து வரும் ஞாயிறில் இருந்து அவனுடைய காதலியாக இருப்பதற்கு அவள் சம்மதித்து விட்டாள். ஞாயிறு வருவதற்கு இன்னும் மூன்றே மூன்று நாட்கள் இருந்தன. அதுவரைக்கும் பொறுத்திருப்பது சிரமமான காரியம் தான்.

உடனேயே காதலி கிடைப்பதில் அவனுக்கு ஒரு தடை இருந்தது. தற்சமயம் அவளுக்கு ஒரு காதலன் இருந்தான். அவனுக்கு வேலை மாற்றலாகி 2000 மைல் தூரத்துக்கு போகிறான். இனிமேல் திரும்பி வரமாட்டான். ஆகவே அவர்கள் இருவரும் மனமொத்து தங்கள் காதலை எதிர்வரும் ஞாயிறு காலையிலே முறித்துக் கொள்கிறார்கள். அதன்பிறகு அவள் இவனுடைய காதலியாகிவிடுவாள்.

அவள் ஒரு பெண் நாயுடன் உலாத்த வந்தபோதுதான் அந்த சந்திப்பு நிகழ்ந்தது. தினம் தினம் அதே பாதையில், அதே நேரத்துக்கு அலை அலையான சடை வைத்த அந்த ஸ்பானியல் நாயை அழைத்து வருவாள். பழுப்பு நிறத்தில் கட்டைக் கால்களும், நீண்டு தொங்கும் காதுகளுமாக அது ஆசையைத் தூண்டும் விதத்தில் இருக்கும். நல்ல ஒழுக்கங்கள் பழக்கப்படுத்திக் கொடுக்கப்பட்ட நாய், அவளுடைய கையில் இருந்த சங்கிலிக்கு ஏற்றவாறு அது அவளது இடது குதிக்காலடியில் குடுகுடுவென்று ஓடி வந்து கொண்டிருக்கும்.

அவன் நடத்தி வந்தது ஆண் நாய். ஜேர்மன் ஷெப்பர்ட் இனத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தது. மிகுந்த செலவில் பயிற்சி பெற்றது. ஒரு துரும்புக்கும் தீங்கிழைக்காது. குலைக்காது. கண்மூடி இருந்தாலும் இரண்டு பயங்கர கண்கள் போல தோற்றமளிக்கும் கறுப்பு வட்டமான புருவங்கள். பார்த்தவுடன் யாருக்கும் சிறிது பயம் தோன்றும். அந்த நாயினுடைய பெயர் ஜாக்.

அந்த நாய்கள் தான் முதலில் சந்தித்தன. ஒன்றையொன்று மணந்து பார்த்து பிறகு உரசிக்கொண்டன.

அவள் முதலில் 'ஹாய்' என்றாள். இவனும் சொன்னான்.

"உங்கள் நாயின் முடி மிகவும் பளபளப்பாக இருக்கிறது" என்றாள்.

"நன்றி. பெயரென்ன வைத்திருக்கிறீர்கள்?" என்றான்.

"ஜெனிப.்ர்."

"மன்னிக்கவும். நாயின் பெயரைக் கேட்டேன்."

"அதுதான் ஜெனிப.்ர்" என்றுவிட்டு சிரித்தாள்.

அழகான சிரிப்பு. பற்களை மிகவும் அநீதியாக அந்த உதடுகளால் மூடி வைத்திருந்தாள்.

அவனுடைய முதல் பொய் ஒரேயொரு செங்கல்லாக அப்படித்தான் ஆரம்பித்தது. அதற்குப் பிறகு ஒரு செங்கல்லைத் தாங்குவதற்கு இன்னொன்று என்று பெரிய கட்டிடமே எழும்பிவிட்டது.

அது தன்னுடைய சொந்த நாய் இல்லை என்பதையோ, தான் சம்பளத்துக்கு வேலை பார்க்கும் ஒரு 'நாய் நடத்தி' என்பதையோ அவன் கூறவில்லை. ஐந்து வீடுகளில், வீட்டுக்கு ஒரு நாயாக ஐந்து நாய்களை தினமும் நடத்துவதுதான் தன் வேலை என்பதையோ, அந்த ஊதியத்தில் தான் தன் மாதச் செலவுகளைச் சமாளித்து வருகிறான் என்பதையோ அவன் சொல்ல மறந்துவிட்டான்.

அவளோ வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். பட்டப்படிப்பை முடித்தபிறகு கம்ப்யூட்டரில் வரைபடம் போடுகிறாள். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் படத்தைக் கொடுத்தால் இருபது வருடங்களுக்குப் பிறகு அது எப்படித் தோற்றமளிக்கும் என்பதை ஊகமாக வரைந்துவிடுவாள். அதைப் போலவே மிருகங்களையும் செய்ய பயிற்சி எடுக்கிறாள். பூனை, நாய், குதிரை போன்றவற்றை உருமாற்றம் செய்வது அவளுக்கு மிகவும் விருப்பமானது. தன்னுடைய நாய்க்குட்டி பத்து வருட காலத்தில் எப்படி காட்சியளிக்கும் என்பதை வரைந்து சட்டம் போட்டு வீட்டிலே மாட்டி வைத்திருக்கிறாள்.

அவள் வரும் நேரங்களை அவன் அறிந்திருந்தான். மற்ற நாய்களை வெவ்வேறு வேளைகளில் நடத்திப் போவான். ஆனால் ஜாக்கை மாத்திரம் ஒரு சொந்தக்காரனின் தோரணையில் குறித்த நேரத்தில் நடத்தி வந்து அவளைச் சந்தித்தான். அவர்கள் சங்கிலிகளைக் கழற்றி அந்த நாய்களை விளையாட விடுவார்கள். அவள் சங்கிலியை மாலை போல போட்டுக் கொண்டு குனிந்து ஒரு முறை தன் உடலைப் பார்ப்பாள். அந்தச் செய்கை அவனுடைய அடிஉணர்வுகளை சில்லென்று தட்டி ஏதோ செய்யும். அவள் உடம்பின் ஈரமான பகுதிகளில் எல்லாம் உடனேயே முகத்தை வைத்து அழுத்த வேண்டும் என்று அவனுக்குத் தோன்றும்.

அவனுடைய அப்பா இரண்டு கல்யாணமும், ஒரு சிறைவாசமும் செய்தவர். வீட்டிலே நாய் வளர்ப்பதை தீவிரமாக எதிர்த்தார். அவன் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் அது நடக்கவில்லை. டீவியில் விளையாட்டு சானல் தவிர வேறு ஒரு சானலையும் அவர் போட மாட்டார். எப்பவும் வாய் திறப்பதில்லை: பலமான மௌனம் அனுட்டிப்பார். இரண்டு மடங்கு மௌனத்தில் அவனும் இருப்பான். திடீரென்று அவர் வாயைத் திறந்தால் அது ஒரு கட்டளை இடுவதற்காகத்தான் இருக்கும். அவன் வீட்டை விட்டு ஓடியபோது கூட ஒரு கட்டளை நிறைவேற்றப்படாத நிலையிலேயே இருந்தது.

இப்பொழுதுதான் அவன் வாழ்க்கையில் முதல்முறையாக ஒரு திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. திடீரென்று இரண்டு அதிர்ஷ்டங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஞாயிறில் இருந்து அவனுக்கு அவள் காதலியாகிவிடுவாள். இரண்டாவது ஜாக்கின் சொந்தக்காரர் குடும்பத்தோடு விடுமுறையில் போகிறார். இரண்டு வாரத்துக்கு அவருடைய வீட்டை பார்க்கும் வேலை அவனுக்கு கிடைத்திருக்கிறது. பெரும் வசதிகள் கொண்ட வீட்டில் அவன் தங்குவான், அதுவும் நல்ல சம்பளத்துக்கு.

அபூர்வமான தோட்டம் அமைந்த அந்த வீட்டுக்கு அவளை முதல் முறையாக அழைத்து வந்தபோது அவள் ஆச்சரியம் காட்டவில்லை. மாறாக மிக இயல்பாக நடந்து கொண்டாள். நீண்ட காலணிகளை வீட்டின் படிக்கட்டுகளில் பக்கவாட்டாக வைத்து டக்டக் என்று ஏறினாள். மேல் கோட்டை கழற்றிய பிறகு, முதுகுத்தண்டோடு ஒட்டிய வயிறு தெரிவது போல ஒரு மெல்லிய நீண்ட ஆடையில் அது 'இஸ்க் இஸ்க்' என்று சத்தமிட நடந்து வந்தாள். அவளில் இருந்து புறப்பட்ட ஒரு பிரகாசம் வீட்டின் ஒளியை மேலும் கூட்டியது. பாம்பு போல கைகளைச் சுற்றி அவன் கழுத்திலே போட்டு "என் மூன்றாவது காதலனே" என்று சிரித்தபடி சொல்லி ஒரு சிறு முத்தம் கொடுத்தாள். பிறகு சாவதானமாக வீட்டைச் சுற்றி பார்க்க ஆரம்பித்தாள்.

"நீ தனியாகவா இருக்கிறாய்?" அவள் கேட்டாள்.

"நான் சொன்னேனே. என் பெற்றோர்கள் விடுமுறையில் போயிருக்கிறார்கள். இரண்டு வாரத்திற்கு நானே அரசன்: நீயே அரசி."

"மைக்கேல், நீ ஏன் போகவில்லை?"

"என் பெயர் மைக்கேல் இல்லை." அவன் தன் பெயரை சொன்னான்.

"நீ சமைப்பாயா?"

"இன்று காலை என்ன சாப்பிட்டேன் தெரியுமா? உறையவைத்த முட்டை"

"உறையவைத்த முட்டையா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மிக அருமையான தயாரிப்பு." அவன் அந்த முட்டை செய்யும் விதத்தை வர்ணிக்கத் தொடங்கினான். உற்சாகமாக கண் இமைக்காமல் அதைக் கேட்டாள். நடுநடுவே அவள் தனது இடது மார்பைத் தொட்டுத் தொட்டு நகர்த்தி வைத்தபடியே இருந்தாள்.

'கொஞ்சம் இரு, நான் சிகரெட் வாங்கி வருகிறேன்' என்று சடுதியாக அவன் புறப்பட்டபோது தான் அந்தத் தவறு நடந்திருக்க வேண்டும். ஒரு பிறவியிலேயே அடையமுடியாத சமயம் கூடி வந்திருந்தது. இந்த நேரத்தில் சிகரெட் ஒரு கேடா என்பதை அவன் மனது யோசிக்கவில்லை.

வீட்டின் சொந்தக்காரர் வீட்டை ஒப்படைக்கும் போது மோசஸ ின் பத்து கட்டளைகள் போல மூன்று கட்டளைகளை அவனுக்கிட்டிருந்தார்.

அந்த பிரம்மாண்டமான வீட்டிலே அவன் எங்கேயும் தங்கலாம், எங்கேயும் உலாத்தலாம். ஆனால் பிரத்தியேகமான அவருடைய படுக்கை அறைக்குள் மட்டும் அவனுக்கு அனுமதி இல்லை. இரண்டாவது, அவனுக்கு இருந்த சிகரெட் மோகத்தை மனதிலே இருத்திச் சொன்னது. ஸாமன் மீனுக்கு புகைபோடுவது போல சுவாசப்பைகள் கருகுமட்டும் அவன் புகை உற்பத்தி செய்யலாம். எவ்வளவு சிகரெட் வேண்டுமானாலும் ஊதித்தள்ளலாம். ஆனால் அதை வீட்டுக்கு வெளியே செய்ய வேண்டும். மூன்றாவது இன்னும் பிரதானமானது என்ன தான் தலை போகிற காரியமாக இருந்தாலும் மாலை சரியாக ஆறு மணிக்கு (5.55 அல்ல 6.05 அல்ல) ஜாக்கிற்கு அதனுடைய இரவு உணவைக் கொடுத்துவிட வேண்டும்.

ஜாக்கிற்கு வேண்டிய உலர் உணவுப் பெட்டிகளையும் அளவு குவளையையும் சொந்தக்காரர் விட்டுப் போயிருந்தார். குளிர் பெட்டியிலே அவனுக்கு போதுமான சாப்பாட்டு வகைகள் இருந்தன. பாரிலே பீர், வைன் வகைகள், உடற்பயிற்சி அறை, நீச்சல் குளம், நூற்றுக்கணக்கான புத்தகங்கள், 53 இன்ச் டீவி கொண்ட கேளிக்கை அறை என்று எல்லாம் அவனை சந்தோஷப்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்தன. இப்பொழுது அவளும் இருந்தாள்.

'நல்ல பிள்ளையாக இரு' என்றான். அந்த வாசகத்தை ஜாக்குக்கு சொன்னானா, அவளுக்கு சொன்னானா தெரியவில்லை. முன் கதவைச் சாத்திக் கொண்டு புறப்பட்டான். முகப்பிலே பொருத்தியிருந்த மின் விளக்கு அவன் நிழல் பட்டு திடீரென்று பற்றி எரிந்தது. அவன் அகன்றதும் அணைந்தது.

அவளுக்குப் பிடிக்கும் என்று அவன் யப்பானிய உணவு வகை அன்று தயாரித்திருந்தான். ஒரு பரிசாரகனின் திறமையான அலங்காரத்துடன் அவை மேசையிலே காட்சியளித்தன. அதில் முக்கியமானது சூஸி. சிறு சோற்றுப் பருக்கைகளைத் தட்டையாக்கி, கடல் பாசியில் சுற்றி, முள் இல்லாத மீன் சதையை மேலே வைத்து செய்தது. ஓர் அழகான பீங்கானில் நீள்வட்டமாக அவை அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதற்கு வேண்டிய தொடு குழம்பு இன்னொரு சிறு கோப்பையில் பக்கத்தில் இருந்தது.

இந்த வீடு அவளுக்கு மிகவும் பிடித்துக்கொண்டது. இதன் அமைப்பு நூதனமானது. மனிதர்களின் வசதிக்காக இது கட்டியதாகத் தெரியவில்லை. பறவைகளுக்கும், வளர்ப்பு பிராணிகளுக்கும், தாவரங்களுக்குமாக கட்டிய வீடு போல காட்சி தந்தது.

அவளுடைய கவனம் படுக்கை அறையிலேயோ, வரவேற்பறையிலேயோ, கேளிக்கை அறையிலேயோ செல்லவில்லை. படிக்கும் அறையிலேயே சென்றது. விதம்விதமான தாவரங்களும், செடிகளும் அதை அலங்கரித்தன. வெளியே கொத்துக் கொத்தாக டியூலிப்கள் அத்தனை வண்ணத்திலும் பூத்துக் குலுங்கின. ஜன்னல் கண்ணாடியில் ஒட்டிய தேன் குவளைகளில் இருந்து தேன் குடித்த சிட்டுகள் ஒரே நேரத்தில் முன்னுக்கும் பின்னுக்குமாக பறந்து ஆர்ப்பாட்டம் செய்தன.

உலோகத்தில் செய்த குதிரைவீரன் சிலை ஒன்று இருந்தது. அந்தக் குதிரை இரண்டு கால்களையும் உயரே தூக்கி நின்றது. அதன் சைகை அந்த குதிரைவீரன் இறந்துவிட்டான் என்பதே. ஒரு காலை மாத்திரம் தூக்கி வைத்திருந்தால் அந்த வீரன் போரிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபட்டிருப்பான். குதிரை நாலு காலையும் ஊன்றி நின்றால் குதிரையும் சேமம், அவனும் சேமம். அவள் எங்கேயோ அதுபற்றி படித்திருந்தாள். அந்தப் போர்வீரனின் பெயரைக் கேட்கவேண்டும் என்று ஞாபகத்தில் குறித்து வைத்துக்கொண்டாள்.

சட்டம் மாட்டப்பட்ட சில குடும்பப் படங்கள் தொங்கின. எல்லா படங்களிலும் காலடியில் ஒரு நாய் இருந்தது. ஜாக் வருவதற்கு முன்பு அந்த நாய்கள் இருந்திருக்கலாம். படங்களில் இருந்ததெல்லாம் ஒரு கணவனும், மனைவியும் ஒரு சிறுமியும் மட்டுமே. ஒவ்வொரு படமாக அந்தப் பெண் குழந்தை வளர்ந்துக் கொண்டே வந்தாள். ஒரு படத்தில் கூட அவன் இல்லாதது ஆச்சரியமே. படத்தில் இருக்கும் குட்டி நாயை கம்ப்யூட்டரில் போட்டு வயதாக்கினால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்தாள். ஜாக்கின் முகச்சாயல் கொண்டதாக அது இல்லை.

சுத்த வெள்ளியினால் செய்த இரண்டு உள்ளங்கை குடங்கள் மூடியுடன் அடுக்கியிருந்தன. கீழே Little Flower Company என்று சிறிய எழுத்துக்களில் பொறித்து தேதியும் காணப்பட்டது. ஆச்சரியங்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வந்தது.

அவன் வருவதற்கிடையில் அங்கு குளிக்கலாம் என்று நினைத்தாள். தயார் நிலையில் இருந்து அவனை திக்குமுக்காட வைக்கலாம். நீண்ட காலணியை மற்ற குதிக்காலின் உதவியோடு கழற்றி, அதன் மேற்பாகத்தை பெருவிரலில் தொங்கவிட்டு, ஒரு நிமிடம் அது பெண்டுலம் போல அசைவதை ரசித்துவிட்டு மெள்ள எற்றினாள். அது சுவர் ஓரத்தில் போய் விழுந்தது. மற்ற காலணியையும் கழற்றி எறிந்தாள். இன்னும் பிற ஆடைகளையும் நீக்கிவிட்டு குளியலை நின்ற நிலையிலே முடித்தாள். பிறகு தொளதொள மேலங்கி ஒன்றை அணிந்துக் கொண்டாள். இரண்டு பக்கமும் நீண்டு தொங்கும் வார்களை அசட்டையாக முடிந்து, உடம்பின் மறைக்க வேண்டிய குறைந்தபட்ச பாகங்களை மூடியபடி குளியலறையிலிருந்து வெளியே வந்தபோது அவன் பேயைக் கண்டது போல காட்சியளித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த படுக்கை அறையைத்தான் வீட்டின் சொந்தக்காரர் எது காரணம் கொண்டும் பாவிக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தார். ஆனால் அந்த அற்ப பிரச்சனையை அவன் இப்போது கிளப்புவதற்குத் தயாராக இல்லை. கைகளை அகலமாக விரித்து 'வா' என்று கூப்பிட அவள் ஓடிவந்து அவன் கைகளுக்கிடையில் ஒரு பறவையைப் போல ஒட்டிக் கொண்டாள்.

சாப்பாட்டு மேசையிலே இரண்டு பிளேட்களும், இரண்டு சிவப்பு நாப்கினும் மடித்து வைக்கப்பட்டிருந்தன. நீல நிற மெழுகுவர்த்திகள் இரண்டு கிறிஸ்டல் பீடங்களில் நின்று மெல்லிய ஒளியை வீசின. வெள்ளியில் செய்த கத்தியும், கரண்டியும் உரிய இடத்தில் இருந்தன. மிக உயந்த சார்டொனே வைன் குளிராக்கப்பட்டு அதற்குரிய நீண்ட கிண்ணங்களுடன் ரெடியாக இருந்தது. சந்தர்ப்பத்தை எப்படியோ ஊகித்த ஜாக்கும், ஜெனிப.்ரும் மிக ஒழுக்கத்தோடும், கண்டிப்போடும் வளர்க்கப்பட்ட இரு குழந்தைகள் போல அமைதியாக விளையாடிக் கொண்டிருந்தன.

படுக்கையிலே கால்களை நீட்டி அவன் அமர்ந்திருந்தான். அவனுடைய முழங்கால்களில் வசதியாக தன் பிருட்டத்தை இருத்தினாள். பிறகு அவன் கன்னங்களை ஏந்தியபடி "முதலில் அந்த குதிரைவீரனின் பெயர் என்ன? சொல்லு" என்றாள்.

"எந்தக் குதிரை வீரன்?"

"ஸ்டடியில் இருக்கும் குதிரைவீரன் தான்."

"ஓ"

"என்ன ஓ"

"அதுவா, எனக்குப் பெயர் ஞாபகமில்லை."

"சரி, ஜாக்கிற்கு முன்பு எத்தனை நாய்கள் இருந்தன?"

"யாருக்குத் தெரியும்?"

"மைக்கேல்! நீ விளையாடுகிறாய்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னுடைய பெயர் மைக்கேல் இல்லை." அவன் பெயரைச் சொன்னான்.

"சரி விடு, ஜாக்கிற்கு முன்பு இருந்த நாய்களின் பெயர்கள் என்ன?"

"பெயர்களா?"

"இரண்டு நாய்கள் இருந்திருக்கின்றனவே. படத்தில் பார்த்தேன்."

"ஓ"

"என்ன ஓ"

"ஞாபகமில்லை."

அவனுக்கு பதற்றமாகியது. என்ன நேரத்தில் இவள் என்ன கேள்வி கேட்கிறாள்.

"உனக்கு அந்த ஞாபகங்கள் மிகுந்த துக்கத்தை உண்டாக்குகின்றனவா?"

"ஆமாம்." அவன் கண்களை அரைக்கம்பத்துக் கொடிபோல இறக்கி துக்கமாக வைத்துக் கொண்டான்.

"மன்னித்துக்கொள். அவை எப்படி இறந்தன?"

"எவை?"

"உன்னுடைய நாய்கள் தான்."

"ஓ"

"என்ன, எல்லாத்திற்கும் ஓ என்கிறாய்,"

"அன்பே, இது என்ன குறுக்கு விசாரணை. அற்புதமான எங்கள் நேரம் வீணாகிக்கொண்டு வருகிறது. கிட்டவா, கிட்டவா என்று மிருதுவாகப் பேசி அவளை அணைத்தான். அவனுக்கு பயம் பிடித்துவிட்டது. அவளுடைய கேள்விகள் ஆபத்தான திசையில் போய்க் கொண்டிருக்கின்றன. நூல் இழையில் தான் தப்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதும் தெரிந்தது.

"நான் எங்கேயும் ஓடிவிட மாட்டேன். போன ஞாயிறில் இருந்து நீயல்லவோ எனது காதலன். இந்த உடம்பு உன்னுடையது தான். இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் கூறிவிடு. அது தெரியும்வரை என்னுடைய மூட் தூரத்திலேயே இருக்கும்."

"சரி, என்ன கேள்வி?"

"மூடனே, அந்த நாய்கள் எப்படி இறந்தன. ஒன்று 80 -இல் இறந்திருக்கிறது. மற்றது 91 -இல் இறந்திருக்கிறது. தயவு செய்து சொல். எனக்கு அழுகை வருகிறது."

அவள் தேம்பித் தேம்பி அழுவதற்கு மிகவும் தயாராகிக் கொண்டு வந்தாள்.

"அழாதே, அழாதே, என் தேவடியாக்குட்டி. எப்படி உன்னால் அவை இறந்துபோன வருடங்களைச் சொல்ல முடிகிறது?"

"எல்லாம் அந்த அஸ்தி கலசங்கள் தான். இரண்டு குட்டி கலசங்களில் Little Flower Company என்று பெயர் எழுதி, வருடங்களும் பொறித்து வைத்திருக்கிறதே. அது நாய் தகனம் செய்யும் கம்பனி அல்லவா?"

பொய்கள் தங்களுக்கு விதித்த எல்லைகளை அடைந்துவிட்டன. இரண்டு சைஸ் பெரிதான குளியல் அங்கியில் இருந்த அவளைக் கிட்ட இழுத்தான். அவனுடைய வயிறும், அவளுடைய வயிறும் இரண்டு வடக்கு தெற்கு காந்தங்கள் போல ஒட்டிக்கொண்டன. வலது கையால் அவள் உடம்பின் ஈரமான பகுதிகளை தடவித் தேடியபடி எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டான்.

ஒரு பகல் காலத்து மின்னலைப்போல அவள் கட்டிலிலிருந்து துள்ளிக் குதித்தாள். குளியல் மேல் அங்கியை நின்ற இடத்திலேயே கழற்றி குவியலாக விட்டாள். அவளுடைய வழுவழுவென்ற நீண்ட கால்கள் அற்புதமான ஒரு கறுப்பு முக்கோணத்தில் சந்தித்துக் கொண்டதை அவன் பார்த்தான். அப்போது வெளியே சீறிய தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சுக் காற்றுகளை கட்டுப்படுத்துவதற்கு அவனுக்கு இரண்டு சுவாசப் பைகளும் போதவில்லை.

"ப்ளீஸ், ப்ளீஸ்..... எல்லாவற்றுக்கும் ஒரு விளக்கம் இருக்கிறது" என்று மன்றாடியபடியே அவளைப் பின்தொடர்ந்தான். ஒவ்வொரு கணமும் அந்த அழகு அவனுக்கு கிட்டாததாகிக் கொண்டு வந்தது. சொந்தக்காரரால் அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்ட அந்த அறை, ஒரு விநாடியில் கசங்கி சுருண்ட படுக்கை விரிப்புகளாலும், நின்ற இடத்தில் தரையிலே உரிந்துவிட்ட குளியல் அங்கியாலும், மேசையிலே அசட்டையாக பானம் வைத்த கிளாஸின் அழியாத வட்ட விளிம்பினாலும், எறிந்ததால் புரண்டு கிடந்த இரண்டு காலணிகளாலும் அலங்கோலமாகிக் காட்சியளித்தது.

நீண்ட ஆடைகளின் கீழே அவளுடைய வெள்ளைப் பாதங்கள் தத்தியபடி இருந்தன. அவள் குனிந்து காலணிகளை மாட்டியபோது அவளுடைய பின் பாகத்தின் வெடிப்பு அவள் சட்டையை கவ்விப் பிடித்தது. அவள் மூக்கு ஓட்டைகள் கோபத்தில் அசிங்கமாக விரிந்தன. "நீ ஒரு லவராக இருப்பதைக் காட்டிலும் ஒரு பொய்யனாக இருப்பதில் உன் திறமையைக் காட்டிவிட்டாய்." போகிற போக்கில் எதிரே இருந்த அரைவட்ட மேசையை அவளுடைய உருண்டை தொடை பக்கவாட்டில் இடித்தது.

விறுக்கென்று தன் நாயை 'ஜெனிப ்ர்' என்று கூவி அழைத்தாள். நீண்ட நேரம் இருப்பதற்கு திட்டம் போட்டிருந்த அந்த நாய் திடுக்கிட்டு எழுந்தது. ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டதை எப்படியோ ஊகித்து அவள் கால்களுக்கிடையில் புகுந்து என்ன செய்வது என்று தீர்மானிக்க முடியாமல் சுழன்று சங்கிலியின் பிடியில் மாட்டி இழுபட்டது. பிரம்பு போன்ற முதுகுடன், எரிச்சல் ஊட்டும் விதமாக மார்புகளை முன்னே தள்ளியபடி, பிடரி மயிர் துள்ள எதிரே ஒரு குட்டை தண்ணீர் தேங்கி நிற்பது போன்ற பாவனையில் கால்களை தாண்டி வைத்து அவள் நடந்து போனாள். அவளுடைய நீண்ட ஆடை இப்போது 'இஸ்க் இஸ்க்' என்ற ஒலியை ஏனோ எழுப்பவில்லை. நிழல் பட்டு வேலை செய்யும் அந்த வாசல் மின் விளக்கு அவள் உருவத்தைக் கண்டு பிரகாசமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கணம் எரிந்து மீண்டும் அணைந்து போனது.

அவன் கட்டிலில் மல்லாக்கப் படுத்திருந்தான். மடியில் ஒரு சாம்பல் கிண்ணம் இருந்தது. ஒட்டகம் படம் போட்ட சிகரெட் பெட்டியில் இருந்து ஒவ்வொரு சிகரெட்டாக எடுத்துப் பற்றவைத்துப் பற்றவைத்து இழுத்து அந்தக் கிண்ணத்தை நிறைத்துக் கொண்டிருந்தான்.

சிகரெட் குடிக்கும் செய்கையில் அவன் இருந்ததாகத் தெரியவில்லை. அந்தக் கிண்ணத்தை எப்படியும் அன்று இரவு பூர்த்தியாவதற்கிடையில் சாம்பலால் நிறைத்துவிடவேண்டும் என்று முடிவெடுத்தவன் போலவே காணப்பட்டான்.

ஜாக் மிக அமைதியாக இருந்தது. அங்கே நடந்து முடிந்து போன அவனுடைய வாழ்க்கையின் மிகப் பெரிய சரிவைப் பற்றி அது ஒருவித அக்கறையும் காட்டவில்லை. அதற்கு அவனே தற்போதைய எசமான். நேற்றைய எசமானைப் பற்றி யோசித்ததாகத் தெரியவில்லை. நாளைக்கு யார் எசமான் என்ற விசனமும் இல்லை. காலை ஆகாரத்தைப் பற்றியோ, இரவு உணவு எங்கிருந்து வரும் என்பது பற்றியோ அறிவு இல்லை. உலகம் எப்படியும் அதன் விருப்பப்படி இயங்கியே ஆகவேண்டும் என்ற தோரணையில் அது சாவதானமாகப் படுத்திருந்தது.

இரண்டு கைகளாலும் அள்ளி அணைக்கும் தூரத்தில் அவள் படுத்திருந்த மெதுவான படுக்கையின் பள்ளங்கள் இன்னும் முற்றாக அழியவில்லை. அவள் முடி ஒன்று அவளறியாமல் உதிர்ந்து அவளின் ஒரு பகுதியாக அங்கே தங்கிவிட்டது. அவள் உடம்பில் இருந்து புறப்பட்ட மெல்லிய வாசனை ஒன்று இன்னமும் அங்கேயே சுழன்று கொண்டிருந்தது.

உலகில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் அவசியமான, ஆனால் மிகக் குறைந்த பேர்களாலேயே அறியப்பட்ட சமையல் கலையில் அவனுக்கு விருப்பம் உண்டு. மூன்று மணி நேரம் நின்ற நிலையில் அவளுக்காக யப்பானிய உணவு சமைத்திருந்தான். அவள் ஒன்றைக்கூட ருசி பார்க்கவில்லை. கடல் பாசியில் சுற்றிய சூஸி முறுகிக்கொண்டு வந்தது. மெழுகுவர்த்தி அவிழ்த்துவிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய கூந்தலைப்போல உருகி வழிந்தது. மூப்பாகிய வைன் விரைவில் அறையின் உஷ்ண நிலையை அடைந்துவிடும்.

திடீரென்று அவனுக்கு நினைவு வந்தது. நாயின் உணவு நேரம் மாலை ஆறு மணி, அது தாண்டி வெகு நேரம் ஆகிவிட்டது. திறமான பயிற்சிகளால் மிக நல்ல பழக்கங்கள் பழகிக்கொண்ட அந்த கறுப்பு நாய், இரு முன்னங்கால்களை நீட்டி தன் காதுகளை மறைத்தபடி, பழுப்புக் கண்களால் இத்தனை நேரமும் அவனையே பொறுமையாக பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

பெரும்புலவர்
மர்ஹூம் முஹமத் ஹன்ஸீர்

முஹமத் ஹன்ஸீர் அவர்கள் எமது கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும், உபதலைவராகவும் இருந்து பல ஆண்டுகள் சேவை செய்தவர்.

2022 ஆண்டு மே மாதம் இயற்கை எய்திய பெரும்புலர் மர்ஹூம் முஹமத் ஹன்ஸீர் அவர்களுக்கு எங்களின் கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கழகத்தின் காப்பாளர் கவிநாயகர் கந்தவனம் அவர்களுக்கு
"இலக்கிய வித்தகர்" என்னும் பட்டம் வழங்கி மதிப்பளித்த போது ....

அமரர் சபா அருள்சுப்பிரமணியம் அவர்களுக்கு
"குழந்தை கவிவித்தகர்" விருது வழங்கி மதிப்பளித்த போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் அகவி சுரேஸ் அவர்கள்
நிகழ்த்திய உலகச்சாதனையைப் பாராட்டி மதிப்பளித்த போது....

பாவலர் வே. இராஜலிங்கம் அவர்களுக்கு
“விருத்தக்கவி வித்தகர்” விருது வழங்கி மதிப்பளித்த போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SEYON TAX

admin@seyontax.ca | 416.438.3350 | www.seyontax.ca



SEYON TAX

416.438.3350

- Income Tax Classes
- Book Keeping / Payroll
- Personal Tax
- Corporation Tax
- US - Cross Border Tax

admin@seyontax.ca

2010 Ellesmere Road, #11, Scarborough M1H 3B1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org